1080

REGISTERED No. M. 6165.　　　　ந. பை. 13

# பத்ஹுல் இஸ்லாம்

# FATH-HUL-ISLAM

OFFICE OF THE REGISTRAR OF BOOKS, MADRAS
16 DEC 1958

மாத பத்திரிகை

டிசம்பர்—1958.

| விஷயம். | பக்கம். |
| --- | --- |
| இஸ்லாத்தின இணையற்ற தியாகம் ... ... ... | 1 |
| பெரியோர்களின் பொன் மொழிகள் ... ... ... | 7 |
| இந்தியாவுக்கு வந்த முதல் முஸ்லிம் யார்? (ஆர். எம். பாகவி) ... ... ... ... | 11 |
| சிறைப் பறவை சப்கத்துல்லா அல்லது துப்பு துலக்கிய தூயவர் ... ... ... ... | 15 |
| தியாகத் தழும்பு வேளாங்கண்ணி, கவிஞர் சாந்திதாசன் ... | 25 |

பத்ஹுல் இஸ்லாம் ஆபீஸ்:
...ஹைரோட், திருவல்லிக்கேணி,
மதராஸ் 5.

3L
O7m2H, N24SI
N58
18708

# பத்ஹுல் இஸ்லாம்.

சந்தா விபரம்: இந்தியா, பாகிஸ்தான், ஸிலோனுக்கு

| | | |
|---|---|---|
| வருஷ சந்தா | ரூ. | 1-50 |
| தனிப் பிரதி நயா பைஸா | | 0-13 |
| மற்ற வெளி நாடுகளுக்கு வருஷ சந்தா | ரூ. | 2-00 |

எல்லா ஊர்களிலும் ஏஜெண்டுகள் தேவை. எல்லா விஷயங்களுக்கும் கீழ்கண்ட விலாசத்திற்கு எழுதவும்.

மானேஜர்,
பத்ஹுல் இஸ்லாம்,
20, ஹைரோட், திருவல்லிக்கேணி, மதறாஸ் 5.


## நபிகள் நாயகம் (ஸல்) அவர்களும் குர்ஆனின் நல்லுபதேசமும்

(முதல் பதிப்பு)

இதில் நமது நாயகம் முஹம்மது (ஸல்) அவர்கள் அவதரித்தது முதல் வபாத்து வரை சுருக்கமாக விபரித்து எழுதப்பட்டுள்ளது. இத்துடன் நாயகம் (ஸல்) அவர்கள் தமது உம்மத்துமார்களுக்கு மொழிந்தருளிய உபதேசங்களும், குவலயத்தோர்க்கு குர்ஆன் ஷரீப் கூறும் செய்திகளுள் சிலதும் சேர்க்கப்பட்டுள்ளன. 115-பக்கங்கள் கொண்டது. விலை ரூ. 1-00

ஹாஜி எம். எ. ஷாஹுல் ஹமீது அண்டு ஸன்ஸ்,
நெ. 20, ஹைரோட், திருவல்லிக்கேணி, மதறாஸ் 5.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
19 DEC 1958
MADRAS

# பத்ஹுல் இஸ்லாம்

டிசம்பர்—1958.

## இஸ்லாத்தின் இணையற்ற தியாகம்

தியாகம் என்பது நமது தீனுல் இஸ்லாத்தில், ஒவ்வொரு முஸ்லிமுடைய வாழ்க்கையிலும் அமைந்திருக்கிறது. அதை பல பெயர்கள் சொல்லி நாம் குறிப்பிடுகின்றோம். அச்சொற்களில் பிரதானமானது 'ஹிஜ்ரத்' என்பதாகும்.

ஹிஜ்ரத் என்ருல், நமது நபிகள் நாயகம் முஹம்மத் ரஸூலுல் லாஹி (ஸல்லல்லாஹு அலைஹி வஸல்லமவர்கள்), காபிர்களான விரோதிகளுடைய துன்பத் தொல்லைகளைத் தாளமாட்டாது, தமது பிறப்பகமாகிய மக்கா நகரை விட்டு திரு மதீனு நகருக்கு குடியேறிச் சென்று விட்ட புனிதச் சம்பவத்தை நாம் குறிப்பிடுகின்றோம்.

பொதுவாக ஹிஜ்ரத் என்ருல், நமக்குப் பிரியமானதை விட்டு விடுதல், பழைய சம்பந்தங்களை விட்டு விடுதல், நம்முடைய உரிமைகளை விட்டுக் கொடுத்து விடுதல் என்பன போன்ற பொருளும் ஆகிறது. ஆனுல் நாம் வாழ்ந்து வந்த ஊரை விட்டுப் போய் விடுதல் என்பதில், வெளிப்படையாகப் பார்த்தாலும் அந்தரங்கமாக பார்த்தாலும் பல தத்துவங்கள் வெளியாகின்றன.

எனவே, ஒருவன் தன்னுடைய வீட்டையோ தன்னுடைய ஊரையோ, தனது சொந்த நன்மையைக் கருதி விட்டுத் தொலைத்துப் போய் விட்டால், அது ஹிஜ்ரத் ஆகமாட்டாது. அதை இஸ்லாமியத் தியாகம் என்று சொல்லவும் முடியாது. ஆதலின் ஒரு முஸ்லிம், அல்லாஹ்வுக்காக வென்று, சத்திய சன்மார்க்கத்துக்காக வென்று,

முஸ்லிம் சமூக பொது நன்மைக்காக வென்று, வீடு வாசலை விட்டுச் சென்றால் தான், தன்னுடைய சொந்த உரிமைகளை திரஸ்காரம் செய்து விட்டு விட்டால் தான், அதை இஸ்லாமியத் தியாகம் அல்லது ஹிஜ்ரத் என்று நாம் இஸ்லாமியச் சம்பிரதாயப்படி சொல்லுகின்றோம்.

பொதுவான ஹிஜ்ரத் எனப்படும் இணையிலாத் தியாகம், இஸ்லாமியச் சரித்திரத்தில் ஒரு முறைதான் நடைபெற்றது. ஆனால், இத்தகைய இணையிலாத் தியாகம், ஒவ்வொரு முஸ்லிமுடைய வாழ்க்கையிலும், அனுதினமும் அனவரதமும் நிகழ்ந்து கொண்டே தான் இருக்கிறது. அதாவது உண்மை முஸ்லிமானவன், எப்போதும் சதா, தன் ஆத்ம நலத்துக்காக, தர்மார்த்தமாகவும், சன்மார்க்கக் கட்டளைக்கு இணங்கியும், அல்லாஹ் உடைய கட்டளைக்காகவும், திரு நபி (ஸல்) அவர்களின் போதனையாகவும், தனக்குப் பிரிய மானதையும் சகஜமானதையும் பழக்கமானதையும் விட்டுத் தொலைத்து தியாகம் செய்து, நடந்து கொள்ளத்தான் வேண்டி யிருக்கிறது.

இத்துறையில் முதல் வழி காட்டியாய், முதல் உதாரணமாய் நமது நபிகள் நாயகம் ரஸூலுல்லாஹி (ஸல்) அவர்களுடைய புனித வாழ்க்கையின் பிரதம தியாகமாகிய ஹிஜ்ரத்துதான் நம்மெல்லோருக்கும் ஞாபகம் வருகிறது. எவ்வாறெனின்: எல்லாம் வல்ல அல்லாஹ்வின் கிருபையினால், ஒரு உத்தம சத்புருஷரின் மனதில் ஓர் ஞானம் உதயமாகிறது. எனவே மக்களை ஏக தெய்வ வணக்கம் என்னும் சன்மார்க்கத்தின் பக்கம் அழைக்கத் தொடங்குகிறார்கள். அவர்கள் அத்திருத் தொண்டில், காலத்தையே எதிர்த்து நிற்க வேண்டி யிருக்கிறது.

முதலில் எம்பெருமானார் (ஸல்) அவர்கள், தம் தெய்வீக இஸ்லாமிய திருப்பணியை தனியாக இருந்தே ஆரம்பித்தார்கள். "ஏ ஜனங்களே! நீங்கள் போகும் மார்க்கம் சரியல்ல; நான் போதிக்கும் சத்திய மார்க்கத்தின் பக்கம் வாருங்கள்" என்று அரபு நாட்டு மக்கள் அனைவரையும் அழைத்தார்கள். அதற்கு அரபு நாட்டார், ஆதியில் ஆதரவைத் தரவில்லை. எதிர்ப்பையும், விரோதத்தையுமே தெரிவித்துக்கொண்டார்கள்.

மகான் முஹம்மத் நபி (ஸல்) அவர்கள், அந்த எதிர்ப்பையும் விரோதத்தையும் கண்டு அஞ்சி விடவில்லை. அரபு ஜனங்களின் எதிர்க்கூச்சலைக் கண்டு அடங்கி விடவில்லை. எதிர்ப்பும் போராட்டமும் விரோதமும் நாளுக்கு நாள் வளர்ந்து கொண்டே போகிறதே இதற்கு

187081

என்ன செய்வது என்றுதான் சிந்தித்தார்கள். ஆண்டவனின் அனுக் கிரஹம் அவ்வள்ளல் நபி (ஸல்) அவர்களுக்கு ஆதரவளித்தது.

எதிர்ப்பவர்களை எதிர்ப்பதில் பிரயோஜன மில்லை; முரடனை முரட்டுத் தனத்தால் வெல்ல முடியாது. பழுக்காத காய்களைத் தடியால் அடித்துப் பழுக்க வைக்க முடியாது. முரண்டுத் திரியும் காளையை மடக்கிப் போட்டு அடக்குவதென்பது எளிய காரிய மில்லை. எனவே, சமய சந்தர்ப்பமும், சூழ்நிலையும் எப்படி இருக்கிறது என்று பார்க்க வேண்டும்.

எதிர்க் காற்று பலமாக வீசுகிறது. கடல் கொந்தளிக்கிறது. பாய்மரப் படகை எதிர்ப்பக்கமே கொண்டு போய் சேர்க்க வேண்டும். அதற்கு என்ன செய்வது? எதிர்த்து வீசும் சூறுவளிக் காற்றை அப்போதே எதிர்நோக்கிச் செல்வதா? இல்லை. இப்போது எதிர் நோக்கி பாய்மரக் கலத்தை ஈர்த்துச் சென்றால், மரக்கலம் அலைகளால் தாக்கப்பட்டு, காற்றால் அலைக்கழிக்கப்பட்டு மூழ்கித்தான் போய் விடும். கப்பலில் உள்ளவர்களும் மாலுமியும் கோரிய இடத்தை அடையவும் இலக்கியக் கரையில் ஏறவும் முடியாது.

எனவே அச்சமயத்தில் என்ன செய்யவேண்டும்? எதிர்ப்பு சக்திக்கு சிரம் பணிந்து விட்டுக் கொடுக்கத்தான் வேண்டும். காற்று இழுக்கும் திசையில் நமது மரக்கலத்தை நாம் சற்று பின்னுக்கு கொண்டு போய் சேர்க்கத்தான் வேண்டும். அதாவது, நமது இலக்ஷியத்தை சிறிது காலம் வரை, அதாவது எதிர்ப்புயல் அடங்கும் வரை விட்டுக் கொடுக்கத்தான் வேண்டும். இங்ஙனம் புயலை எதிர்க் காமல் பின்னிடைந்து, கொஞ்ச காலம் பொறுத்திருந்தால், காற்று அடங்கி விடும், புயல் ஓய்ந்து விடும், அலைகளும் தணிந்து விடும், அப்போது மரக்கலத்தை சுலபமாக நாம் விரும்பும் கரைக்கு எளிதில் கொண்டு போய்ச் சேர்க்கலாம்.

இந்த விட்டுக் கொடுக்கும் தன்மை, அதாவது நாம் பின்வாங்கும் தன்மை, வெளிப்படைக்கு ஒருவகைத் தோல்விபோல் தெரியலாம். ஆனால் உண்மையில் அது தோல்வியாக மாட்டாது. சூழ் நிலையை யொட்டி, இடம் பொருள் ஏவலையொட்டி, நாம் கையாளும் ஒரு தந்தி ரோபாயம் என்றே இது கருதப்படவேண்டும். புலி பின்வாங்குகிற தென்றால் அது அதன் தோல்வியைக் காட்டாது. காட்டில் மனிதனைக் கண்டு புலி, முதலில் பின்வாங்கும். பிறகு சரேலென்று

ஒரே பாய்ச்சலாய் பாய்ந்து வந்து விழுந்து தாக்கும். இது அதன் தந்திரோபாயத்தைக் காட்டுகிறது. இது ஒருவகைத் தந்திரம்.

ஆனல், இதைத் தியாகம் என்ருே, விட்டுக் கொடுத்தல் என்ருே சொல்ல முடியாது. ஆனல் இஸ்லாமிய சரித்திரத்தில், ஆதியில் முஸ்லிம்கள் காபிர்களின் கொடுமைக்கும் எதிரிகளின் எதிர்ப்புக்கும் அஞ்சி, தம் வீடு வாசல், ஊர் உறவுகளை விட்டுப் போய் விட்டது இணையற்றதோர் அரிய தியாக மாகும்.

இது ஒரு பக்க மிருக்கட்டும். பொதுவான ஹிஜ்ரத் என்பது இஸ்லாமிய சரித்திரத்தில் பிரதானமாய் விளங்குவதைப் போலவே, ஒவ்வொரு முஸ்லிமுடைய வாழ்க்கையிலும் சிறந்த அம்சமாய் விளங்குகிறது. அதாவது, முஸ்லிமானவன் பொதுவாக, பிறந்தது முதல் இறக்கும் வரையில் தினமும், எப்போதும், சதா காலமும் ஏதேனுமொருவகையில் ஹிஜ்ரத் என்னும் 'தன்னல தியாகம்' புரிந்து கொண்டேதான் இருக்கின்ருன்.

தன்னலத்தியாகம் என்பது மிக விழுமிய பொருளுடைய ஒரு சொல்லாகும். முஸ்லிமானவன் எப்போதும், எச்சமயமும், எந்நேரத்திலும் தன்னலத் தியாகம் புரிந்து கொண்டே இருக்கிருன் என்று சொன்னல் 'அதெப்படி' என்று சிலருக்கு வியப்பாகத் தோன்றலாம்.

பழக்க வழக்கத்தை ஒரு குறிப்பிட்ட நல்ல இலக்ஷியத்திற்காக விட்டு விடுவதும் ஒரு வகையில் தன்னலத் தியாகம் என்ற ரீதிப்படி ஒருவகை ஹிஜ்ரத்துதான். முதன் முதலாக முஸ்லிமானவன் புரியும் தன்னலத்தியாகம் என்பது ஈமான் ஆகும்.

இஸ்லாமிய சம்பிரதாயத்தில் ஈமான் என்பது என்ன? குப்ரிய்யத்தான எண்ணங்களை விட்டும், பாபமான காரியங்களைவிட்டும், தவருன போக்குகளை விட்டும் தன்னைப் பேணிக் காத்துக் கொள்ளும் 'முதல் தடுப்பு' முறையாகும். எவ்வாறெனில், ஒருவன் "லாஇலாஹ இல்லல்லாஹு, முஹம்மதுர் றஸூலுல்லாஹி" என்று சொல்லி "வணங்குவதற்கு உரிய இறைவன் ஒரே ஒருவனுகிய அல்லாஹ் தான்" என்றும், "முஹம்மத் நபி (ஸல்) அவர்கள் அந்த அல்லாஹ்வின் திருத் தூதர்" என்றும் மனதில் உறுதி கொண்டு, ஹிருதயத்தைப் பரிசுத்தப் படுத்திக் கொள்வது ஒரு பெரிய முதன்மையான தியாகமாகும்.

மனிதன் உள்ளத்தில் இயற்கையாகவே பாப இச்சை உண்டாவது சகஜம். கெட்ட காரியம் அவனுக்கு இனிமையாகப் புலப்படும். பாப காரியம் மிக இன்பம் தருவதாகக் காணப்படும். இயற்கையாகவே மனது எளிதில் அதில் போய் லயித்து விடும். ஆடல், பாடல், கேளிக்கை, கூத்து, வீணடம்பரங்களில் கவர்ச்சி அதிகம் இருக்கிறது. ஆடுவதைப் பார்க்க வேண்டு மென்றும், பாடுவதை கேட்க வேண்டு மென்றும், கேளிக்கைகளை ரசிக்க வேண்டு மென்றும், வீண் விளையாட்டில் கலந்து கொள்ள வேண்டு மென்றும் மனிதன் இயற்கையாகவே ஆசைப் படுகின்றான். ஆனால், இதெல்லாம் பாபமான காரியம், பாபமான செயல், சன்மார்க்கத்துக்கு ஒவ்வாத கிருத்தியங்கள், ஆத்மார்த்தத்தை கெடுக்கும் பாதகங்கள் என்று ஈமானுடைய நல்லமுஸ்லிம் நினைத்து, மனதை திடப் படுத்திக் கொண்டு, அவைகளைவிட்டும் ஒதுங்கி, பரிசுத்த வாழ்வு வாழவேண்டு மென்று விரும்பி உறுதி கொள்கிறான்; உடனே அந்தப் பாபமான காரியங்களை யெல்லாம் ஆத்ம நலத்துக்காக விட்டுப் போட்டு, ஒதுங்கி சன்மார்க்கத்தில் வருகின்றான்.

பாப காரியத்தை விட்டுப் பேணிக் கொள்வதும் புண்ணிய காரியத்தின் பக்கம் மனதை லயிக்கச் செய்து கொள்வதும் மகாப் பெரும் தியாகமாகும். மனதை அடக்குவது மகாப் பெரிய சாதனையாகும். மனதை, அதன் இஷ்டம் போல் பாபகாரியங்களின் பக்கம் எதேச்சையாய் விட்டு விடாமல், அதை இழுத்துப் பிடித்து அதற்கு கடிவாளம் போட்டு அடக்கி ஆள்வது மகாப் பெரும் முயற்சி யாகும். இப்படிச்செய்யும்போது கண்ணுக்கும் காதுக்கும் உடலுக்கும் உணர்வுக்கும் மிக இனிப்பான பல அம்சங்களை, நாம் ஆத்மார்த்தமாக விட்டுத் தொலைக்க வேண்டி யிருக்கிறது. இப்படிப்பட்ட தன்மையை 'தன்னலத் தியாகம்' என்று சொல்லலாம். இதை ஒரு வகை ஹிஜ்ரத் என்றும் சொல்லலாம்.

நபிகள் நாயகம் ரஸூலுல்லாஹி (ஸல்) அவர்கள், இந்த தன்னலத் தியாகம் பற்றியும், உண்மையில் ஹிஜ்ரத் என்றால் என்ன வென்றும் ஒரு சமயத்தில் தெளிவாய்த், திருவுளமாய் இருக்கிறார்கள். அதாவது—

"உண்மையான முஹாஜிர் (ஹிஜ்ரத்துச் செய்பவன்) யாரென்றால்: எதை எதை இறைவன், தகாதவை என்று தடுத்திருக்கி

ருனே அதை விட்டுத் தவிழ்ந்து தூய்மையாய் நடந்து கொள்பவனே யாவன்'' என்பதாகும்.

இதை ''ஹிஜ்ரத்தே இலல்லாஹ்'' என்று சொல்லலாம். அதாவது அல்லாஹ்வின் திருப்திக்காக நம்முடைய இஷ்டபூர்வமானகாரியங்களை விட்டு விடுவது ஹிஜ்ரத்தே இலாஹிய்யா வாகும். சொந்த நன்மைக்காக ஒருவன், நல்ல சாப்பாட்டை விட்டு விட்டால், அது தியாகம் ஆகாது. வயிற்றில் வலி உண்டானல், குடலில் அஜீரணம் ஏற்பட்டால், இரண்டொரு வேளை நல்ல திடமான ஆகாரம் சாப்பிட வேண்டாமென்று வைத்தியர் சொல்லி விடுகிறார். எனவே அந்த மனிதன் இரண்டு வேளை, தயாராய் இருக்கும் நல்ல சாப்பாட்டையும் விட்டு, வெறுங் கஞ்சியையோ தண்ணீரையோ உட்கொண்டு காலந்தள்ள வேண்டியவனாக இருக்கிறான்.

இவ்வாறே ஒரு சர்க்கார் உத்தியோகஸ்தன், உள்ளூரை விட்டு வேறொரு பிரதேசத்துக்கு மாற்றப்பட்டுப் போக வேண்டியதா யிருக்கிறது. அப்போது அவன், உத்தியோக உயர்வையும் சம்பள உயர்வையும் கருத்தில் கொண்டு, வீட்டை விட்டும் மனைவி மக்களை விட்டும் பிரதேசத்தை விட்டும் வேற்றிடத்துக்குப் போக வேண்டியவனாக இருக்கின்றான். இதனால் அவன், ஊரை விட்டுப் போகிறான் என்பது வாஸ்தவம் தான்., அதைக் கொண்டு அவன் 'ஹிஜ்ரத்' செய்கிறான் என்று சொல்ல முடியுமா?

ஊரை விட்டுப் போவது மட்டும் ஹிஜ்ரத் ஆகாது; தனக்கு இஷ்டமான ஒன்றை விட்டு விடுவதும் 'தியாகம்' ஆகமாட்டாது. உத்தியோகஸ்தன் வேற்றூர் போவது புண்ணியமான செயலல்ல; சுயநலக் காரியமாகும். ருசியான உணவை, உடல் ஆரோக்கியத்துக்காக விட்டுவிடுவது புண்ணியமான காரியமில்லை. இது வைத்தியப் பரிகாரமாகும்.

இத்தியாதி தத்துவார்த்தங்களைக் கொண்டு தியாகம் என்றால் என்ன? ஹிஜ்ரத் என்றால் என்ன? என்பது ஒருவாறு விளக்கப்பட்டுள்ளது. எனவே, எதையும் அல்லாஹ்வுடைய கட்டளைக்காகவும், ரஸூலுல்லாஹி (ஸல்) அவர்களின் போதனைக்காகவும், தீமையை விட்டு நன்மையை ஏற்று நடந்து கொள்வதே ஒவ்வொரு முஸ்லிமின் லக்ஷியமாகும். இதுவே பக்தி, இதுவே தக்வா, இதுவே ஹிதாயத், இதுவே ஹிஜ்ரத், இதுவே எல்லாம். வஸ்ஸலாம்.

# பெரியோர்களின் பொன் மொழிகள்

**இமாம் மாலிக் (ரஹ்)** அவர்கள் கூறுவது:—“உண்மையான ‘தாலிபுல் இல்ம்’ (மாணவன்) யாரென்றால், யாரிடம் பொறுமையும், தெய்வபக்தியும், கடவுள் பக்தியும் இடையரு உழைப்பும் இருக்கிறதோ அவன் தான். நல்ல மாணவனின் மற்றொரு நற்குணம் யாதெனில்: அவன் பெரியோர்களின் அடிச்சுவட்டைப் பின் பற்றி நடந்து கொள்வான்”

*　　*　　*　　*

**ஹஜ்ரத் அபூதர்தா: (ரலி)** அவர்கள் கூறுவது:—“அறிவு ஞானத்தில் யார் சிறந்தவராய் இருக்கின்றாரோ அவருக்குத் துன்பங்களும் சஞ்சலங்களும் அதிகம் நேரிடுகின்றன.”

(ஆம், பழம் நிறைந்த மரத்தின் மீதுதானே யாரும் கல்லை விட்டெறிகிறார்கள்.)

*　　*　　*　　*

**ஹஜ்ரத் ஜாபிர் (ரலி)** அவர்கள் அறிவிப்பது:—நபிகள் நாயகம் ரஸூலுல்லாஹி (ஸல்) அவர்கள் திருவுளமா யிருப்பதாவது:— “மூன்று பேர்கள் மிகவும் பாராட்டுதலுக்கு உரியவர்களாவர். அவர்களை மூடனும் முனாபிக்கும் தான் ஈனமாய்க் கருதுவான்:— (1) வயதான முஸ்லிம் கிழவர்; (2) அஞ்சாமல் நியாயத்தை நிலைநிறுத்தும் அதிகாரி, (3) பிறருக்கு நல்லுபதேசம் செய்து நல்வழிக்கு வாருங்கள் என்று அழைப்பவர்.”

*　　*　　*　　*

**தாவூஸ்** என்ற பேரறிஞர் கூறுவதாவது:—“நீங்கள் கல்வி கற்றுக் கொள்வதானால், உங்கள் சொந்த நன்மைக்காக மட்டுமென்று கற்றுக்கொள்ளாதீர்கள். பிறருக்கும் போதனை செய்து ஞானத்தை உலகில் பரத்தவேண்டுமென்று இலக்ஷியம் கொள்பவனே நல்ல அறிவாளி.”

*　　*　　*　　*

**மாலிக் இப்னு தீனார்** அவர்கள் கூறுவது:—“யார் தனக்காக மட்டும் கல்வி கற்றுக் கொள்கிறானோ அவனுடைய கல்வியானது, பிறருக்கும் போதிக்கலாமென்று கற்றுக் கொள்கிறானே அவனுடையதை விட, குறைவாகத்தான் இருக்கும். கல்வியானது எடுக்க எடுக்க குறையாத செல்வம்; அள்ள அள்ள வற்றாத ஊற்றுக்கேணி.

*　　*　　*　　*

**ஹஜ்ரத் ஷுஅபி** அவர்களிடம் ஒரு பெண்மணி வந்து ஒரு கேள்வி கேட்டாள். அதாவது "அறிஞரே, மாபெரும் ஆலிமே, எனக்கு ஒரு பத்வா கொடுப்பீர்களா? என்பதாகும். அதற்கு ஷுஅபீ கூறிய பதிலாவது:—"நான் ஒரு பெரிய ஆலிம் (அறிஞன்) என்பதற்காக உனக்கு பத்வா கொடுக்க மாட்டேன். உண்மையான ஆலிம் யாரென்றால், அல்லாஹ்வுக்குப் பயந்து, தனக்குத் தெரிந்ததை ஒளிக்காமல் எடுத்துச் சொல்பவன் தான்."

* * * *

**ஹஜ்ரத் அப்துல்லாஹ் பின் மஸ்ஊது (ரலி)** ஒரு சமயம் தனது சிஷ்யருக்கு இவ்வாறு கூறினார்கள்:—"மாணவனே, நீ பொது ஜனங்களுடன் பேசும்போது, அவர்களுடைய அறிவாற்றலுக்குத் தகுந்த மாதிரியே பேசுவாயாக, சிறியவர்களுக்குப் பெரிய விஷயத்தை சொல்லாதே. பாமரர்களுக்கு தத்துவ வாதங்களை எடுத்துரைக்காதே. இன்னும் பெரிய அறிவாளிகளிடம் உன் சமார்த்தியத் திறமையை எடுத்துக் காட்டாதே. அவர்களுடைய கேள்விக்கு மாத்திரம் சரியான பதில் சொல்லிவிடு."

* * * *

**உர்வா இப்னுஸ் ஸுபைர்** (ரலி) தம்முடைய அருமைக் குமாரரான ஹிஷ்ஷாமுக்கு பின்வருமாறு உபதேசம் செய்தார்கள்:— "பிள்ளாய், நீ பிறருக்கு ஒரு விஷயத்தை எடுத்துக் கூறினால், பிறருக்குப் புரியும் படியான வகையில் எடுத்துச் சொல். பிறர் உனக்கு உரைக்கும் விஷயம் புரியாவிட்டால் (விளங்காவிட்டால்) அது உன்னுடைய அறிவுக்குறைவு என்று எண்ணிக்கொள்; சொல்பவருக்கு விளக்கத் தெரியவில்லை என்று எண்ணாதே. அப்படி எண்ணினால் அது உனக்கே கெடுதியாகும்.

* * * *

**ஹஜ்ரத் அப்துல்லாஹ் பின் அப்பாஸ்(ரலி)** கூறுவது:— நீங்கள் பொது ஜனங்களுக்கு அல்லாஹ், ரஸூலுடைய விஷயத்தை எடுத்துச் சொல்லும் போது, அது அவர்களுக்குப் புரிகிற விதத்தில் எடுத்துச் சொல்லுங்கள். நீங்கள் எடுத்துச் சொல்லும் விதம் அவர்களுக்குப் பயன்படா விட்டால், அவர்கள் அல்லாஹ் ரஸூலுடைய விஷயமே பொய் என்று நினைத்துவிடுவார்கள்.

* * * *

**ஹஜ்ரத் உமர் பாரூக் (ரலி)** அவர்கள் கூறியிருப்பது:— "நீங்களும் (மதக்) கல்வியை கற்றுக் கொள்ளுங்கள். பிறருக்கும் கற்றுக் கொடுங்கள். கல்வியைக் கற்றுக்கொண்டதினால், பெருமை கொள்ளாதீர்கள், பெருந்தன்மையும் நல்ல பண்பும் கற்றுக் கொண்டால் தான் கல்வி கற்றதனாலான பயன் உண்டாகும். நீங்கள்

கல்வி கற்றுக்கொண்டவருக்கு மரியாதை செய்யுங்கள். உங்களிடம் கல்வி கற்றுக் கொள்பவரிடம் அன்பு செலுத்துங்கள். உங்கள் மாண வர்களிடம் (கற்றுக் கொள்பவரிடம்) கொடுங்கோன்மையை (மிரட்டலை) காட்டாதீர்கள். துற்குணத்தையோ, கோபத்தையோ வெளிப்படுத்தாதீர்கள். தாழ்மையே எப்போதும் நல்லபண்பு ஆகும்."

* * * *

**ஒரு அனுபவஸ்தர்** கூறுவது:— நீங்கள் புரியவேண்டிய நான்கு காரியங்களில் எப்போதும் மனச்சடைவோ, வெறுப்போ, அசிரத்தையோ கூடவே கூடாது. அவையாவன:—

(1) தாய்-தந்தைக்கு மரியாதையும் பணிவிடையும் புரிவது.

(2) விருந்தினர்க்கும் உறவினர்க்கும் உணவளித்து உபசாரம் புரிவது.

(3) தம்முடைய வாகனத்தை (குதிரை முதலியதை) நேரில் கவனித்துப் பாதுகாத்தல் (வண்டி அல்லது குதிரையை ஓட்டும் வேலைக்காரர் இருந்த போதிலும்) மேற்பார்வைப் பார்த்து நடத்த வேண்டும்.

(4) அறிஞர்களிடம் மாணவனாய் இருந்து ஏதும் கற்றுக் கொள்ளும் போது, உஸ்தாது வேண்டிய பணிவிடை புரிவதில் பின் னடையக் கூடாது.

(பாகவி)


## மூளை பலத்தால் முன்னேறியவர்

இது ஹென்றி போர்ட் என்னும் ஒரு அமெரிக்கரின் ஜீவிய சரித்திர சுருக்கம். இவர் ஒரு சாதாரண மனிதராக இருந்து, பிறகு உலகத்திலேயே பெரிய பணக்காரராக விளங் கினர். இவர், தான் பணக்காரராக ஆனதுடன் அமெரிக்கா வையே ஒரு செல்வம் நிறைந்த நாடாக ஆக்கியவர்களில் ஒரு வராகத் திகழ்ந்தார். பெரிய பணக்காரர்கள் மட்டும் அனுப விக்கக் கூடிய ஒரு வஸ்தாக இருந்த மோட்டார் வண்டியை, சாதாரணமானவர்களும் உபயோகிக்கும்படி மலிவான விலைக்கு முதலில் விற்கும்படி செய்தவர் இவர் தான்.

இதன் விலை நயா பைசா. 20

**ஹாஜி எம். எ. ஷாஹுல் ஹமீது அண்டு ஸன்ஸ்,**
கெ. 20, ஹைரோட், திருவல்லிக்கேணி, மதராஸ் 5.

வெளிவந்து விட்டது! வெளிவந்து விட்டது!!

# 1959-வது வருஷத்தின்

## ஹமீதிய்யா முஸ்லிம் காலண்டர்

இதில் இங்கிலீஷ், தமிழ், அரபு ஆக மூன்று தேதிகளும் 3 கலர்களில் அச்சிடப்பட்டு ஒரு மாதத்திற்கு ஒரு ஷீட்டாக 12 ஷீட்டுகள் அடங்கியுள்ளன. ஒவ்வொரு ஷீட்டிலும் தொழுகைகளின் நேரங்களாகிய அவ்காத்துஸ்ஸலாத்தும் சேர்க்கப்பட்டுள்ளது. இவை சொற்ப காலண்டர்களே அச்சிட்டு வருவதால் ஜனவரி-மீ வருவதற்குள் செலவாகி விடுவது சகஜம். ஆதலால் தங்களுக்குத் தேவையுள்ள காலண்டர்களுக்கு உடனே ஆடர் செய்து பெற்றுக்கொள்ளுமாறு கேட்டுக் கொள்கிறோம்.

ஒரு காலண்டர் விலை நயா பைசா. 75

நூறு காலண்டர்கள் விலை ரூ. 60-00

---

கிடைக்குமிடம் :—

ஹாஜி எம். எ. ஷாஹுல் ஹமீது அண்டு ஸன்ஸ்,

கெ. 20, ஹைரோட், திருவல்லிக்கேணி, மதராஸ்-5

# இந்தியாவுக்கு வந்த முதல் முஸ்லிம் யார்?

(R. M. பாகவி)

இஸ்லாமிய சரித்திரத்தில், முஸ்லிம்கள், ஹிஜ்ரீ 1-வது நூற்ருண்டிலேயே உலகின் மீது பெரும் பான்மையான ஆதிக்கம் உடையவர்களாய் இருந்தார்கள். அதாவது: முஸ்லிம்களின் வீரதீர கீர்த்திப் பிரதாபமும், ஜனநாயகத்தின் அரசு செலுத்தும் பான்மையும் உலக மெங்கும் புகழப்பட்டு வந்தன. எனவே, உலகில் முஸ்லிம்கள் அக்காலத்திலேயே பெரியதோர் புரட்சியை உண்டு பண்ணும் முறைமையில், கீர்த்திப் பிரதாபத்தோடு வாழ்ந்து வந்தார்கள்.

இஸ்லாமியத் தலைவர்களின் எளிய வாழ்க்கை முறையினால், அவர்கள் உலக மக்களெல்லோரின் கவனத்தையும் ஈர்ந்து கொண்டார்கள். "லோகத்தையே ஆளக்கூடிய வீரமும் சக்தியும் ஆற்றலும் இருந்தும் கூட, இந்த இஸ்லாமிய கலீபாக்கள், இவ்வளவு எளிய வாழ்க்கை நடத்துகிருர்களே" என்று உலகத்தின் இதர தேசத்து அரசர்கள், பிரதானிகள், சேனாதிபதிகள் முதலியோர் பேராச்சரியப் பட்டு வந்தார்கள்.

அக்காலே முஸ்லிம்களுடைய இஸ்லாமிய ஜனநாயக ஆட்சி முறையின் கீர்த்திப் பிரதாபம், அண்டை நாடுகளில் மட்டுமில்லே; ஸ்பெயின், சீனு, ஐரோப்பா முதலியவைகளிலும் குறிப்பாக நம் ஹிந்துஸ்தானத்துக்கும் பரவி வந்துள்ளது.

## இந்தியாவில் முதல் முஸ்லிம் விஜயம்

இஸ்லாமிய ஆட்சி காலத்திலே, இரண்டாவது கலீபாவாகிய ஹஜ்ரத் உமர் பாருக் (ரலி) அவர்களுடைய கிலாபத் ஆட்சியின் போதுதான், ஹிந்துஸ்தானமாகிய நம் இந்தியாவைப்பற்றி சிரத்தை எடுத்துக் கொள்ளப்பட்டது.

அதற்குமுன் சர்வ சாதாரணமாக அரபு வியாபாரிகள், வாணிபத்தின் நிமித்தம் இந்தியாவுக்கு வந்து கொண்டும், போய்க் கொண்டும் தான் இருந்தார்கள். ஆனல், இந்தியாவின் மீது முஸ்லிம்கள் முதன் முதல் படையெடுத்து வந்தது எப்போது? என்று கேள்வி எழலாம். அதற்கு ஹஜ்ரத் உமர் பாருக் (ரலி) அவர்கள் காலத்தில் தான் அரபு முஸ்லிம்கள் முதன் முதல் இந்தியாவின் மீது படையெடுத்து வந்தார்கள் என்று சுருக்கமாய் பதில் கூறி விடலாம்.

ஹஜ்ரத் உமர் பாருக் (ரலி) காலத்தில் தான், முஸ்லிம்கள் இந்தியாவின் மீது படையெடுத்து வந்தனர் என்பதைக் கொண்டு, அதற்கு முன் இந்தியாவில் முஸ்லிம்கள் யாருமே இருந்தது கிடையாதென்று கருதிக் கொள்ளக் கூடாது. ஏனெனில், வியாபாரம் நிமித்தமாகவும், தேசத்தை சுற்றிப் பார்ப்பது என்ற கருத்துடனும்

எவ்வளவோ அரபு முஸ்லிம்கள், அக்காலே ஏற்கெனவே இந்தியாவில் வந்து, குடியேறி தங்கி, வசித்து வந்துள்ளார்கள்.

## மலபார் தேசத்தில் இஸ்லாம் ஜோதி

இந்தியாவாகிய இப்பரந்த பெரும் தேசத்தில், முதன் முதல் இஸ்லாத்தின் பிரகாசச் சுடர் பரவிய புனிதப் பகுதி எது? இதைப் பற்றி இஸ்லாமியச் சரிதையும், இந்தியப் பண்டைச் சரிதையும் சான்று பகர்கின்றன.

நாம் மலேயாளம் என்றும், சேர நாடு என்றும் அழைக்கும் மலபார் பிரதேசம்தான், இந்திய நாட்டினிலே முதன் முதல் இஸ்லாத்தின் பிரகாசத்தை அடையப் பெற்ற 'பாக்கிய நாடு' என்று சொல்லலாம். ஏனெனில், மலபார், காரமண்டல் பிரதேசங்களின் கரைப் பகுதிகள், அதாவது அதன் கடலே அடுத்த பிரதேசங்கள் அரபுக் கடலே அடுத்தவையாய் இருக்கின்றன.

இஸ்லாம் மதம் நன்கு வியாபிப்பதற்கு முன்னமேயே, சில பல அரபு வியாபாரிகள், பாய்ப் படகுகளிலும், கட்டு மரங்களிலும் மிகப் பிரயாசைப்பட்டு, இந்தியாவின் மேற்குக் கடற்கரைப் பிரதேசங்களாகிய இந்த மலேயாள தேசமான மலபாருக்கும், கேரளம் என்னும் இந்த கார்மண்டலத்துக்கும் வந்து,சரக்குகளே விற்றும் வாங்கியும் சென்றுள்ளார்கள். இதற்கு இந்தியச் சரித்திரத்திலும் சான்று இருக்கிறது.

## ஈரானிலும் இஸ்லாமிய வெற்றி

இஸ்லாமிய சமுதாய முறைப்படி, குடியரசாங்க ரீதிப் பிரகாரம், முதன் முதல் முஸ்லிம்கள் ஈரான் என்னும் பாரசீக நாட்டைத்தான் வென்று, இஸ்லாமிய இளம்பிறைக் கொடியை நிலே நாட்டினர்கள்.

அதன் பின் சீஸ்த்தான் வழியாக, மக்ரான் என்ற பகுதியை பிடித்து, அதன் வழியாக அரபு முஸ்லிம் வீரர்கள், முதன் முதலாக இந்திய மண் மீதுள்ள (இருந்த) சிந்துப் பிரதேசத்தின் மீது சமுதாய முறைப்படி காலடி வைத்தார்கள்.

(சிந்து மாகாணம் என்பது இப்போது இந்தியாவை விட்டுப் பிரிந்து பாகிஸ்தானேடு இணைந்திருந்து வரும் ஒரு பிரதேசமாகும்.)

## சிந்துவில் இஸ்லாம்

அந்த சிந்து மாகாணம்தான் அரபு தேச முஸ்லிம்கள் தரை வழியாக முதன் முதல் இந்தியாவுக்குள் வருவதற்குத் தலேவாசல் போல் இருந்த வழியாகும்.

சிந்து மாகாணத்துக்கு, அப்பண்டை முஸ்லிம்கள் படையெடுத்துவர மிகவும் கஷ்டப்பட்டார்கள். இயற்கையின் சங்கடங்கள் மிகவும் இடையூறு அளித்தன. அதாவது, மலேகளேயும், கணவாய்களேயும், ஆறுகளேயும் அவர்கள் கடந்து கஷ்டப்பட்டு வரவேண்டியதாய் இருந்தது.

## முஹம்மத் பின் காஸிமின் தைரியம்.

முஹம்மத் பின் காஸிம் என்ற அரபு முஸ்லிம் இளைஞரே, இந்தியாவின் மீது (சிந்துப் பிரதேசத்தில்) முதன் முதலாக படைகளைக் கொண்டு பிரவேசித்து, இஸ்லாத்தின் கொடியை நாட்ட முயன்ற மாவீரர்.

முஹம்மத் பின் காஸிம் அப்போது பதினேழு வயதுடைய வாலிபராக விளங்கினார் என்றும் சொல்லப்படுகிறது. அவர் ஒரு முறை இரண்டு முறையல்ல; பதின் முறை படையெடுத்து வந்தாரென்றும் சொல்லப்படுகிறது.

## அதற்கு முன் ஒருவர்:

முஹம்மத் பின் காஸிமுக்கு முன்னர் கூட, அரபு முஸ்லிம்கள் இந்தியா மீது படையெடுத்து வந்தனர் என்று ஒரு சில சரித்திராசிரியர்கள் கூறுவர். அதாவது, முஹ்லப்-பின்அபீஸுஃப்லா என்ற படைவீரர், இந்தியாவின் மீது அதற்கு முன்னரே ஒருமுறை படையெடுத்து வந்துள்ளார் என்ற அச்சரித்திரக்காரர்கள் செப்புகின்றனர்.

இந்த முஹ்லப் படையெடுத்து வந்த காலம், மூன்றுவது கலீபாவான ஹஜ்ரத் உஸ்மான் (ரலி) அவர்கள் கிலாபத்—ஜனநாயக ஆட்சி நடத்திக் கொண்டிருந்த காலமாகும். ஆனால், இந்த முஹ்லப் படையெடுத்து வந்து போய்விட்டாரே அல்லாமல், இந்தியாவில் இஸ்லாத்தின் பெயரால் எந்த அடையாளத்தையும் ஏற்படுத்தி விட்டுப் போக வில்லை. எனவே, இன்னவருடைய இந்திய விஜயம் முதன்மையாய் இருந்தாலும், சரித்திரத்தில் நல்ல இடம் பெறவில்லை. வீண்முயற்சியாகவும் பலனற்ற பிரயாசையாகவுமே கருதப்படுகிறது.

## பனு உமய்யா காலத்தில்

பனீ உமய்யாக்களின் ஆட்சி காலத்தில், இஸ்லாம் மதம் உலகின் பல திக்கிலும் பரவியது. முஸ்லிம்கள் தங்கள் அரசாங்க ஆதிக்கத்தின் எல்லைகளை வெகுதூரம்வரை விஸ்தரித்துக் கொண்டே போய் விட்டனர். பல திக்கிலும் பல வெற்றிகள் கிடைத்தன.

## கலீபா வலீத் காலத்தில்

கலீபா காலித் பின் வலீத் உடைய ஆட்சிகாலத்தில் தான், வீர இளைஞர் முஹம்மத் பின் காஸிம், இந்தியாவின் மீது தீவிரமாக படையெடுத்து வந்தார். இந்தப் படை யெடுப்புக்கு, கலீபா காலித் பின் வலீதுடைய ஆதரவும் இருந்ததென்று சொல்லப்படுகிறது. என்ன விருந்தாலும், பதினேழு பதினெட்டே வயதுடைய ஓர் இளைஞர், ஒருபெரும் படையை நடத்திக் கொண்டு, மலைக்கணவாய்களை யெல்லாம் கடந்து கொண்டு வந்து, இந்திய மண்மீது முதன் முதல் வெற்றிக் கொடியை நாட்டினார் என்றால், அதை அவசியம் பாராட்டத்தான் வேண்டும்.

"அரபு முஸ்லிம்கள் அக்காலத்தில் இந்தியாவின் செல்வத்தை கொள்ளை யடித்துச் செல்வதற்காகத்தான், இந்தியாவின் மீது அடிக்கடி படையெடுத்து வந்து தாக்கினர்" என்று ஓர் அபவாத மொழி சொல்லப்படுகிறது. இது இஸ்லாத்துக்கு எதிரான மனப்பான்மையுடையவர்களால் புனைந்து உரைக்கப்பட்ட வீண் சொல்லேயாகும்.

உண்மையில் வீர இளைஞர் முஹம்மத் பின் காஸிமுக்கு அத்தகைய பணத்தாசை, பொருளாசை, இருந்தது கிடையாது. அவருக்கு இஸ்லாமிய வளர்ச்சியில் இருந்த பிரமாதமான பற்றும் அபிமானமுமே இதற்கு காரணமாகும்.

## கஜனி சுல்தான் காலத்தில்

அதன்பின் ஹிஜ்ரீ 10-வது, 11-வது நூற்றாண்டுகளில், இந்தியாவின் மீது படையெடுத்து வந்தவர்கள் அரபுகளல்ல; கஜனி வம்சத்தைச் சேர்ந்த பாரசீக முஸ்லிம் வீரர்களாவர். இன்னவர்களுடைய மனதில், அங்ஙனம் இந்தியா மீது படை யெடுப்பதற்கு இஸ்லாம் மதப்பற்று மட்டும் காரணமாய் இருக்க வில்லை; சில சரித்திரக்காரர்கள் கூறுவது போல், பொருளாசையும் செல்வப்பற்றும் காரணமாய் இருந்தது.

கஜ்னி வம்ச சுல்தான்கள், இந்தியாவின் மீது பல திக்கிலிருந்தும் படையெடுத்து வந்து, பல வெற்றிகளையும் சாதித்திருக்கிறார்கள். இதற்கு சரித்திரமே சான்று பகர்ந்து கொண்டிருக்கிறது.

## கோரி, கஜ்னீ காலம்

சுல்தான் முஹம்மத் கோரியும் இந்தியாவின் மீது படையெடுத்து வந்தது இஸ்லாத்தின் மீதுள்ள அபிமானத்தாலல்ல; இந்தியாவின் செழிப்பின் மீது ஆதிக்கம் கொள்ள வேண்டுமென்றேயாம்.

இவ்வாறே, மன்னன் கஜ்னி மஹ்மூதைப் பற்றியும் பெயர் பிரஸ்தாபம் இருக்கிறது. மன்னன் கஜ்னிமஹ்மூத், பதினேழு முறை இந்தியாவின் மீது படையெடுத்து வந்தார் என்றும், பல முறை அவருக்கு எதிர்ப்பும் தோல்வியும் ஏற்பட்டுங்கூட அவர், பின்வாங்கி ஓடிப்போய் விடவில்லை என்றும் சொல்லப்படுகிறது.

சுல்தான் ஷஹாபுத்தீனுடைய பெயரும் இந்தியாவின் கண் இஸ்லாமியக் கொடியை நாட்டிய பழங்கால முஸ்லிம் வீரர்களின் வரிசையில் சேர்க்கப் பட்டிருக்கிறது.

எது எவ்வாறாயினும், இஸ்லாத்தின் பெயரால் இந்தியாவின் மீது, அரபுக்கடல் வழியாகவும், பாரசீகப் பூமி வழியாகவும், ஆப்கானிய மலைக்கணவாய் வழியாகவும் படையெடுத்து வந்தவர்களாலேயே, இந்தியாவில் இஸ்லாமியக் கலையும், முஸ்லிம் சமூதாய வாழ்வும் நிலைத்து, இன்றளவும் வியாபித்து இருந்து வருகிறதென்பதில் சந்தேகமில்லை.

# சிறைப் பறவை சிப்கத்துல்லா

## அல்லது

# துப்பு துலக்கிய தூயவர்.

### அத்தியாயம். 26

கிளப் இன்ஸானியத் விருந்துக்கு முதலில் வந்தவர் சிப்கத் துல்லா. அவரை பணியாள் ஷர்புத்தீன் முகமன் கூறி வரவேற்ருன். பின்னர், மிக மெதுவாக, "துப்பாக்கி வைத்திருக்கிறீர்களா?" என்று கேட்டான்.

"துப்பாக்கி வைத்திருக்கும் வழக்கமில்லை, எங்கு சென்ருலும் அதனை எடுத்துச் செல்லும் பழக்கம் மிகக் கெட்டது."

"நீங்கள் இவ்வளவு தூரம் முன்யோசனை யில்லாமல் வருவீர்கள் என்று நான் நினைக்கவில்லை."

"சிறை வாசம் செய்த ஒவ்வொருவரும் முன்யோசனை யில்லாத வனே யாவான். அவன் முன்யோசனையுடன் நடந்திருந்தால் சிறைக் குச் செல்ல வேண்டிய அவசியமே ஏற்பட்டிருக்காதல்லவா? ஏன், எதற்காகச் சொல்கிருய்? என்ன விபரீதம் நடந்து கொண்டிருக் கிறது?"

"எனக்குத் தெரியாது. ஆனுல், எட்டாம் எண்ணுள்ள அறை யில் விநோதமான சம்பவங்கள் நிகழ்ந்திருக்கின்றன. சுவர் கண்ணுடிப் பக்கமாக முதுகை காட்டிக் கொண்டு உட்காராதீர்கள்."

சிப்கத்துல்லா 'சரி' என்பதற்கு அடையாளமாக தலை யசைத் தார்.

அவர் நடை முற்றத்தின் அந்தக் கோடிக்குச் சென்றதும் லிப்ட் மேலேவரும் சப்தம் கேட்டது. அங்கேயே நின்று திரும்பிப் பார்த்தார். கரீமுல்லாகான் வந்திருந்தார். அவரிடம் பணியாளின் எச்சரிக்கையை அவர் மிக மெதுவாகச் சொன்னுர்.

"சூதுமிக்க எந்தக் காரியத்தையும் அவர்கள் செய்வார்கள் என்று நான் நினைக்க வில்லை. ஆனுல், அவர்கள் அவ்வாறு செய்யத் துணிந் தார்களானுல், இளம்பிறை ஆஸ்பத்திரி நர்ஸ் பின்வருமாறு சொல் லும்படி நேரிடலாம்: 'என்ன, நீங்கள் இங்கு மீண்டும் வந்திருக் கிறீர்களா?"

சிப்கத்துல்லா எதிர் பார்த்தபடி, கரீம் ஷரீபும் காதர்கானும் எட்டாம் எண்ணுள்ள அறையில் அவர்களுக்காக காத்திருந்தார்கள். விருந்தாளிகளின் வருகையைத் தொடர்ந்து நிலவிய அமைதி அவர்களி லொருவனுக்குச் சகிக்க முடியாத சங்கடம் அளித்தது.

"நீ வந்தது கண்டு களிப்படைகிறேன்" கரீமுல்லாவைப் பார்த்து கரீம் ஷரீப் சொன்னுன். "பழைய நண்பர்கள் அவர்களது

அறிமுகத்தைப் புதுப்பித்துக் கொண்டிருக்க வேண்டும். இதோ, எனது மகன் காதர்கான். அவனை நீ சந்தித்திருப்பாய் என்று நினைக்கிறேன்."

"அவனை நான் சந்தித்திருக்கிறேன்" கரீமுல்லா சொன்னார்.

நிலைமையை யுணர்ந்து காதர்கான் சமாளித்துக் கொண்டான்.

"சரி, எல்லோரும் உட்காருங்கள்" அங்கு மிங்கும் அலைந்து கொண்டே கரீம் ஷரீப் சொன்னான்: நாற்காலியை இழுத்துப் போட்டு, சிப்கத்துல்லாவை நோக்கி, "நீ இங்கே உட்கார்" என்றான்.

"இல்லை, நான் சுவற்றுக் கண்ணாடியைப் பார்த்தாற் போல உட்கார்ந்து கொள்கிறேன். நான் சாப்பிடும் போது கண்ணாடியைப் பார்த்துக் கொண்டே இருக்க விரும்புகிறேன்" என்று சிப்கத்துல்லா சொல்லி விட்டு, அழைப்பு இல்லாமல் அவர் தெரிந்தெடுத்த இடத்தில் உட்கார்ந்து கொண்டார்.

கரீமுல்லா காத்திருக்காமல், உடனே சிப்கத்துல்லாவின் இடது புறத்தில் நாற்காலியை இழுத்துப் போட்டுக் கொண்டு உட்கார்ந்தார். கரீம் ஷரீபின் திட்டங்கள் ஆரம்பத்திலேயே சீர்குலைந்தன; எனவே அவன் மறு பேச்சின்றித் தானே சுவற்றுக் கண்ணாடியின் பக்கமாக முதுகை வைத்துக் கொண்டு உட்கார்ந்தான். தந்தையும் தனயனும் துரிதமாக பரஸ்பரம் கண் ஜாடை செய்து கொள்வதை சிப்கத்துல்லா கண்டு கொண்டார். சுவற்றுக் கண்ணாடி அலமாரியில் தட்டுகள் எதுவும் இல்லாதிருக்கக் கண்டு அந்த திக்கிலிருந்து எத்தகைய அபாயம் விளையுமோ என வியந்து கொண்டிருந்தார்.

பக்கப் பலகையின் பக்கத்தில், ஒரு கோடியில், நீண்ட, நீல நிறமான திரையொன்று தொங்கியது. ஏழாம் எண்ணுள்ள அறைக்குச் செல்லும் கதவை அது மறைத்துக் கொண்டிருக்கிறது போலும் என்று சிப்கத்துல்லா நினைத்தார். கிளப் கட்டிடம் முழுவதும் நன்கு தெரிந்து வைத்திருந்த கரீமுல்லா கானுக்கு அதன் இரகசியம் தெரியும்.

"நண்பர்களே" கரீம் ஷரீப் குதூகலத்தோடு பேச்சு ஆரம்பித்தான். "இப்போது சண்டை, சச்சரவு எதுவும் இருக்கக் கூடாது. நாம் எல்லோரும் இங்கு ஒன்றுகூடி யிருக்கிறோம். எனது மகனின் நல்ல பெயருக்கு இழுக்கு ஏற்படாத வகையில் பிரச்னைக்குப் பரிகாரம் காணவேண்டுமே தவிர வேறு எக்காரியமும் செய்யலாகாது."

"உனது மகனின் கெட்ட பெயரைப் போக்குவதற்கு இது போன்ற விருந்துகள் பயனளிக்காது" கரீமுல்லா காரசாரமாகச் சொன்னார்.

"கரீமுல்லா, காட்டமாகப் பேசுகிறாயே! எனக்கு முதலிலேயே தெரியாமல் போய் விட்டது என் தவறு ஆகும். இமயமலை தரிசனம் செய்து கொண்டிருந்த எனக்கு சிந்திப்பதற்கு நல்ல அவகாசம்

இருக்கத்தான் செய்தது. நீ இமயமலை தரிசனம் செய்தது இல்லை யல்லவா? இமயமலையை தரிசனம் செய்து கொண்டே டெஹ்ராடன் சிறையில் இருக்கும் பொழுது நிறைய 'காலம்' இருக்கிறது. சிறை யில் வேறு என்ன இருக்க முடியும்?"

கரீமுல்லா கான் பதிலளிக்க வில்லை. காதர்கான் சம்பாஷணை யைத் தொடர்ந்தான்.

"கரீமுல்லா, இதோபார். எனது விவகாரம் பற்றி நான் புகழ் பாடப் போவதில்லை. எனது நிலையைப் பூரணமாக விளக்கி விட விரும்புகிறேன். எனக்கு என் மனைவி தான் வேண்டும்."

"ஜீனத்துன்னிஸா எங்கிருக்கிருள் என்பது பற்றி என்னைவிட உனக்கு அதிகம் தெரியும். அவள் இப்போது என்னிடம் வேலை செய்ய வில்லை."

"ஜீனத்துன்னிஸாவா? அவள் ஒழியட்டும். அவளைப் பற்றி அக்கரை யில்லை. அந்த மாதிரி நீ பேசினல் விவகாரம் தீராது. ஜீனத்துன்னிஸாவை நான் மணந்து கொண்டது வாஸ்தவம். ஆனல் அவள் ஏற்கனவே மணமானவள், அதற்கு அத்தாக்ஷிகள் அளிக்க முடியும்."

சம்பாஷணை இங்கு தடைப்பட்டது. 'சாப்ஸ்' எடுத்துக்கொண்டு பரிமாறுபவன் உள்ளே வந்தான்.

"உங்களுக்கு எந்த ரக மது வேண்டும்?"

"நான் மது சாப்பிடுவதில்லை. எனக்கு காப்பி போதுமானது" கரீமுல்லா பதிலளித்தார்.

கரீம் ஷரீப் உள்ளுக்குள் சிரித்துக்கொண்டான்.

"மதுவைக் கொடுத்து மயக்கி விடுவேன் என்று பார்க்கிருயா? சந்தேக மிக்க கிழவனப்பா நீ?"

"தண்ணீர் கொண்டுவா" என்று பரிமாறுவோனிடம் சிப்கத் துல்லா தெரிவித்தார்.

"தண்ணீரா சாப்பிடப் போகிருய்? அது நல்லது" கரீம் ஷரீப் சொன்ஞன். "உன்னைப் போன்ற வாலிபர்கள் தண்ணீர் குடித்துச் சுய நினைவோடு இருந்து கொண்டிருக்க வேண்டும். எனக்கு விஸ்கி வேண்டும். காதர்கானும் அதையே விரும்புவான். விஸ்கியைப் போன்று விறுவிறுப்பூட்டுவது வேறு எதுவும் இல்லை."

நீண்ட கண்ணுடி குவளைகளில் நுரை பொங்கிய மது வகைகள் கொண்டு வரப்பட்டதும் கரீமுல்லாகான் உஷாராகக் கவனித்தார்.

நடவடிக்கைகளை உற்றுக் கவனித்துக் கொண்டே பரிமாறு வோனிடம் "அதுபோதும்" என்ருன் கரீம் ஷரீப்.

கதவு மூடப்பட்டதும் மற்றொரு கதவு மூடப்பட்ட சப்தமும் கேட்டது. இதை சிப்கத்துல்லா நன்கு கவனித்துக் கொண்டார்.

"எங்களை உள்ளே விட்டுப் பூட்டப்படுகிறதா" என்று சிரித்துக் கொண்டே சிப்கத்துல்லா வினவினார். கரீம் ஷரீபின் புருவங்கள் நெளிந்தன.

"உங்களை உள்ளே விட்டுப் பூட்டப்படுகிறதா? மரியமை இழந்து விடுவோம் என்று நீங்கள் இருவரும் பயப்படுவதுபோல உங்களை இழந்து விடுவோம் என்று நாங்கள் பயப்படுகிறோம் என்று நினைத்துக் கொண்டாயா?"

கண்ணாடி டம்ளரை எடுத்து சிப்கத்துல்லா தண்ணீரை உறிஞ்சிக் குடித்தார். கரீம் ஷரீபின் முகத்தையே அவர் கவனித்துக் கொண்டிருந்தார். சுவற்றுக் கண்ணாடியில் அலமாரிக்குப் பின்னால் என்ன இருக்கிறது? என்று அவர் நோட்டமிட்டார்; அது அவருக்குப் புரியாத புதிராக விருந்தது. அது சாதாரணமாய் பலகையினால் செய்யப்பட்டிருந்தது. உள்பக்கம் தவிந்து காணப்பட்டது. அறை விசாலமானதாக இல்லாமையால் இடத்தை அடைத்துக் கொள்ளாம லிருக்க வேண்டுமென அந்த அல்மாரி அவ்வாறு செய்யப் பட்டி ருந்தது போலும்!

தட்டுகள் வைக்கப் பட்டிருக்க வேண்டிய இடத்தின் கீழ் இரு அலமாரிக் கதவுகள் காணப்பட்டன. ஒரு கதவு சற்று நகருவதைக் கண்டார். அது கனவா அல்லது நினைவா என்பதை அவரால் நிதானிக்க முடியவில்லை.

"சிப்கத்துல்லா, இதற்குமுன்பு மாமியார்வீட்டில் இருந்திருக் கிறாயா?" சம்பாஷணையின் பெரும் பகுதி கரீம் ஷரீபினுடையது.

"உனக்கு மூன்று வருடம் சிறைத்தண்டனை கிடைத்தது என்பது எனக்குத்தெரியும். ஆனால், அதுதான் உனது முதல் சிறை வாசமா? அல்லது, அதற்கு முன்பும் நீ சிறை சென்றிருக்கிறாயா?

"அதுவே எனது முதல் சிறைவாசம்."

கரீம் ஷரீப் கூரையைப் பார்த்து, தாடையைத் தடவி விட்டுக் கொண்டான்.

"எப்போதாவது புதுச்சேரி சிறையில் இருந்திருக்கிறாயா? கரீமுல்லா உன்னை விசாரிப்பதில் பயனில்லை. அது எனக்குத் தெரியும். நீ எந்தச் சிறைக்கும் செல்ல வில்லை யல்லவா? நீ தந்திர சாலிதான்"

"வேறு ஏதாவது விஷயம் பற்றி நாம் பேசுவோம்" கரீமுல்லா கான் சொன்னார். "ஜீனத்துக்கு முதலில் மணமாகி யிருந்தது என்று நீ கூறிய கதையை என்னால் நம்பமுடியாது. அந்த விவகாரம் பற்றி விவாதிக்கும் பொழுதெல்லாம் ஒவ்வொரு தடவையும் ஒவ்வொரு பொய் சொல்லி வந்திருக்கிறாய். பழைய சிநேகத்தை உத்தேசித்து

உனக்கொரு வாய்ப்பு அளிக்கிறேன். நீ கேடுகெட்டபன்றி. உனக்கும் தெரியாமலேயே மரணத்தைத் தழுவியணைக்கும் நிலையில் நீ இருந் திருக்கிறாய். ஏனெனில், உனது திட்டங்கள் நீ எதிர் பார்த்தபடி நிறைவேறியிருந்தால், உன்னை நான் கொன்று போட்டிருப்பேன்.”

கரீம் ஷரீப் பரிகாசமாகச் சிரித்துக் கொண்டான்.

“கரீமுல்லா, துப்பாக்கி வீரனாகப்போகிறாயா? உனது பேச்சு வியப்பை அளிக்கிறது. நான் என்ன செய்யப் போகிறேன் என் பதையும் தெரிவித்து விடுகிறேன்.” மேஜை மீது முழங்கைகளை ஊன்றிக் கொண்டு கைகளில் முகத்தைப் புதைத்துக்கொண்டான். மூக்குக் கண்ணாடி வழியாக பழங்கால நண்பன் கரீமுல்லாவையே கவனித்தான். “எனது கணக்குப்படி, எனக்கு நீ நாற்பதினாயிரம் ரூபாய் செலுத்த வேண்டி யிருக்கிறது. அந்தப்பெரும் தொகையைப் போராட்ட மில்லாமல் பெற முடியாது என்பது எனக்குத் தெரியும். அந்தப் பணத்தை எனக்கு கொடுத்து விடு. எனது மகனுடைய மனைவிக்கு காரியங்களை நான் சுலபமாக்கி விடுகிறேன்.”

“ஜேப்படி வேலை செய்து நீ அப்பணத்தைப் பறித்துக் கொள் ளலாம்.”

தந்தையின் வார்த்தைகளைத் தடுக்கும் வகையில் தனயன் காதர் கானின் முரட்டுக்குரல் எழும்பியது.

“பாருலகிலுள்ள பணம் முழுவதையும் பங்கிட்டுக் கொடுப் பதாக இருந்தாலும் என்னிடமிருந்து மரியமைப் பிரிக்கமுடியாது. முதலில் அதைப் புரிந்து கொள்ளுங்கள்.” மேஜை மீது கையை அடித்துப் பேசினான் அவன். “அவள் எனது உடமை ஆகி விட்டாள். அவளை நான் நேசிக்கிறேன். கரீமுல்லா, விஷயம் புரிந்ததா? அவளை நான் அடைந்து தான் தீருவேன்.”

மேஜையிலிருந்து சிப்கத்துல்லா சிறிது அப்பால் நகர்ந்து சென்றார். மார்புமீது கைகளைக் கட்டிக் கொண்ட அவரது உதடுகள் பிரிந்து புன்னகை பூத்தன. அக்குளுக்கு அடியில் ஒளித்து வைத் திருந்த துப்பாக்கியை அவரது வலது கை தொட்டுக் கொண்டி ருந்தது. அலமாரி கதவு திரும்பவும் நகர்ந்தது. அறைக்கதவு மூடிப் பூட்டப்பட்டிருந்தது- மரியமைப்பற்றிய பேச்செல்லாம் அவர் களது கவனத்தை வேறு திசையில் திருப்பு வதற்கேயாகும். இந்த விஷயங்களை யெல்லாம் நன்கு உணர்ந்து ஊகித்துக் கொண்டிருந்த சிப்கத்துல்லா உஷாராகவே இருந்தார்.

காலிதட்டுகளை அப்புறப்படுத்தி விட்டு இரண்டாவது தடவை உணவு பரிமாற வேண்டியிருந்தும் அவ்வாறு செய்யப்படவில்லை. கெடுகோ மாகியும் காலி தட்டுகள் அங்கேயே இருந்து கொண்டி ருந்தன. அதட்டும் தோரணையில், பரிகாசமாக கரீம் ஷரீப் பேச லானான்.

"காதர், நீ நல்ல சந்தர்ப்பத்தைக் கெடுத்துக் கொள்ளக் கூடாது. உண்மையை உரைக்கு மிடத்து..."

திடீரென அறையில் எல்லா விளக்குகளும் அணைந்து விட்டன. உடனே, சிப்கத்துல்லா எழுந்து எச்சரிக்கையாக நின்றார். இருளில் அவரது துப்பாக்கி பளபளத்தது.

"இது என்ன சூது?" கரீமுல்லா காரசாரமாக கேட்டார். "எங்களை ஏய்ப்பதற்கு முயற்சித்தால் உண்மையில் உங்களி லொருவன் உயிர் துறக்க வேண்டி வரும்."

"விஷயம் என்ன வென்பது எனக்குத் தெரியாது." இருந்த இடத்தில் இருந்து கொண்டே கரீம் ஷரீப் பதிலளித்தான். காதர் மணியை அடி. ஸ்விச் கெட்டுப் போய் விட்டது என்று நினைக்கிறேன்."

அறையில் வேறு யாரோ இருந்தார்கள். திருட்டுத் தனமாக உள்ளே பிரவேசித்ததோடு, தம்மை நோக்கி வந்து கொண்டிருக்கும் அந்த ஆசாமியை சிப்கத்துல்லா பார்த்து விட்டார். ஒரு கையை நீட்டிக் கொண்டு, அவர் தயாராகக் காத்துக்கொண்டிருந்தார். ஒரு வினாடி, ஐந்து வினாடி, பத்து வினாடியும் போயிற்று. பிறகு விளக்கு எரிய ஆரம்பித்தது.

சுவர்ப்புறமாக முதுகு வைத்துக்கொண்டு கரீமுல்லாகான் நின்று கொண்டிருந்தார். அவரது கையில் கைத்துப்பாக்கி யொன்று காணப்பட்டது. விளக்குகள் அணைந்த பொழுது இருந்த இடத்திலேயே காதர் கானும் கரீம் ஷரீபும் இருந்தனர். அறையில் ஐந்தாவது மனித னெவனையும் காணவில்லை.

"இது என்ன சூது?" சந்தேகத்தோடு கரீமுல்லா விசாரித்தார்.

"சூது என்று சொல்கிறாய்? நீ கேட்கும் கேள்வியின் பொருள் என்ன? மின்சார ஓட்டத்தில் ஏற்பட்ட கோளாறுக்கு என்மீது பொறுப்பும் பழியும் சுமத்துகிறாயா, என்ன? நான் மின்சார நிபுணன் அல்ல. மற்ற மனிதர்கள் அனுபவித்திருக்கவேண்டிய சிறை வாசத்தை அவர்களுக்காக நான் அனுபவித்திருக்கிறேன். அவ்வளவு தான். இதோ பார் கரீமுல்லா. நீ துப்பாக்கி வைத்துக்கொண்டிருக்கிறாய். அது தவறு. பழைய கேடி யொருவன் சொல்கிறானே யென்று எனது புத்திமதியை உதாசினம் செய்து விடாதே. சிப்கத்துல்லா துப்பாக்கி வைத்துக் கொண்டிருப்பதைக் கண்டு நான் வியப்படைய வில்லை. ஏனெனில் அவன் எதுவேண்டு மானாலும் செய்யலாம், முட்டாள் நண்பர்களே, உட்காருங்கள். நாம் விவகாரத்தைப் பேசித் தீர்ப்போம்.

"அந்தக் கதவை நீ திறந்தால் தான் பேசுவேன்." சிப்கத்துல்லா அமைதியாகச் சொன்னார். "அதே நிபந்தனையின் மீது எனது

துப்பாக்கியையும் எனது சட்டைப்பைக்குள் திரும்பவும் வைத்து விடுகிறேன்''

மூன்று எட்டில் கதவுப்பக்கம் போய், கரீம் கைவிட்டுத்திருகினன்; கதவு திறந்து கொண்டது.

''நீங்கள் பீதியுற்றிருந்தால் கதவைத் திறந்து வைத்துக் கொள்ளுங்கள்'' கரீம் பரிகாசமாகச் சொன்னன். இருள்பற்றிய இந்த பயம் சிறை வாசத்தின் விளைவு என்று நினைக்கிறேன். எனக்குக்கூட பயம் இருக்கத்தான் செய்தது''

அவன் கைப்பிடியைத் திருகியபோது மற்ருெரு 'கிளிக்' சத்தத்தையும் சிப்கத்துல்லா கேட்டார். கதவுக்கு வெளிப் பக்கத்தில் யாரோ நின்று கொண்டிருக்கிருர்கள் என்பதை அவர் நிச்சயித்துக் கொண்டார். கரீம் சொன்ன வார்த்தைகள் அந்த மனிதனை உஷார்ப் படுத்து வதற்கே யாகும் என்பதும் அவருக்கு நிதரிசனமாகத் தெரிந்தது. இதெல்லாம் எதற்கு?

கரீம் ஷரீப் மீது கண் வைத்துக்கொண்டே காப்பியை கரீ முல்லா உறிஞ்சிக் கொண்டிருந்தார். அவரும் அச்சப்தத்தைக் கேட்டாரா? அவருக்கு அச் சப்தம் கேட்டிருக்கும் என்று சிப்கத்துல்லா நிதானித்தார். விளக்குகள் அணைக்கப்பட்டது தற்செயலாக நேர்ந்ததல்ல. இரகசிய சமிக்ஞை ஏதோ கொடுக்கப்பட்டிருக்கிறது; இடையில் கம்பி அறுக்கப்பட்டது போலும். சுவற்றுக் கண்ணாடி அலமாரிக்கதவுகள் அப்படியே இருந்தன. திரும்பிப் பார்த்த போது தம்மையே காதர்கான் உற்றுப் பார்த்துக் கொண்டிருப்பதை அவர் கவனித்து விட்டார். அவன் என்ன எண்ண மிட்டுக் கொண்டிருக்கிருன்?

சூது ஏற்பாட்டின் உச்ச நிலை—அது எவ்வாருக இருந்தாலும்—சமீபத்தில் ஏற்படலாம்.

''சிப்கத்துல்லா, நீ கள்ள நோட்டு அச்சிடுவதில் சம்மந்தப் படாதது எனக்கு வியப்பு அளிக்கிறது'' காதர்கான் மெதுவாக, நிறுத்தி நிறுத்திப் பேசினன் ''அது மிக மிக நல்ல தொழில். பந்தயக் குதிரை மோசடி மூலமாக கிடைப்பதை விட இந்த சாதனம் மூலம் மிகச் சுலபமாக பெரும் பணக்காரனகி விடலாம்.''

''சுவாரஸ்யமான அந்தத் தொழிலை எவ்வாறு துவக்குவது என்பதை எனக்கு எடுத்துரைப்பாய் போலும்;'' சிப்கத்துல்லா அமைதியாகப் பதில் சொன்னர்.

''உனக்காக, நீ விரும்பினல் விளக்கிச் சொல்கிறேன். அந்த இரகசியத்தை அம்பலப்படுத்தி விடுவது மிகச் சுலபம். இல்லை, கள்ள நாணயம் எவ்வாறு அச்சிடப் படுகிறது என்பதையே உனக்கு நான் காட்டி விடுகிறேன்; அதனை நீ விரும்புவாய்.''

"அந்த விஷயத்தில் எனக்குச் சிரத்தை இருக்கிறதா என்பது எனக்குத் தெரியாது. ஆனல், எனது நண்பர் ஜனப் ரஜாக்கான் அதில் அளவுகடந்த அக்கரை கொண்டிருக்கிருர் என்பதை மட்டும் என்னுல் நிச்சயமாகச் சொல்ல முடியும்,

"உனது நண்பர் ஜனப் ரஜாக்கான்! உனக்கும் அவர் நண்பரா என்ன?"

"சட்ட வரம்புக்குக் கட்டுப்பட்டு நடக்கும் பிரஜைகள் எல்லாம் எனது நெருங்கிய நண்பர்கள்"

சட்டைப் பையில் கைத்துப்பாக்கியைத் திரும்பவும் வைத்து விட்டு, அதன் மீது சிப்கத்துல்லா கைவைத்துக் கொண்டிருந்தார்.

காதர் எழுந்திருந்து சுவர் கண்ணுடி அலமாரியின் அருகே சென்ருன். அவன் குனிந்து ஏதோ ஒரு விசையை அழுத்தினுன் போலும். ஏனெனில் அலமாரியின் மூடி தானுகவே சுழன்று திரும் பியது. சிறு இயந்திரம் வெளியே தென்பட்டது. உயர்ந்த மதிப்பு கொண்ட நோட்டுகளை குறிப்பிட்ட அளவில் செய்வதற்குப் பயன் படும் கருவி அது என்பதை சிப்கத்துல்லா உடனே உணர்ந்து கொண்டார்.

இந்த உண்மை புலனுகியதும் சிப்கத்துல்லா அசந்து விட்டார்.

அந்த அலமாரியை உடைத்தெறிந்து போட்டாலும், அதனை உன்னுல் கண்டு பிடிக்க முடியாது.

ஒரு விசையை அவன் அழுத்தினுன். மிகப் பெரிய சக்கர மொன்று சுழன்றது; அதோடு பல சிறு தகடுகளும் உருளைகளும் சுழன்றன. இச்சுழற்சி இரண்டொரு விஞடிகளுக்குத்தான் நீடித் தது; உடனே அவன் மின்சாரத்தைத் துண்டி விட்டான். மீண்டு மொரு விசையை அழுத்தியதும் அந்த இயந்திரம் மாயமாய் மறைந்து விட்டது. சாதாரண அலமாரியின் சாதாரண தோற்றத்தைக் கண்டு சிப்கத்துல்லாவும் கரீமுல்லாவும் வியப்படைந்தார்கள்.

"சுலபமாகப் பணம் சம்பாதிக்கும் வழி" மகனைப் புகழ்ந்த வண்ணம் சிப்கத்துல்லாவை விளித்து கரீம் ஷரீப் சொன்னுன். திடீரென அவனது குரல் ஓங்கியது. நாற்காலிக்குத் திரும்பி வந்து, அவன் கூறினுன் "உங்கள் இருவருக்கும் நன்மைபயக்கக் கூடிய விஷயத்தைச் சொல்லப்போகிறேன். கவனியுங்கள். தற்போதைக்கு நாம் மரியமைப் பற்றிய பிரஸ்தாபத்தை விட்டு விடுவோமாக."

தண்ணீர் குவளையை சிப்கத்துல்லா எடுத்துக் கொண்டார். அவர் இன்னும் சந்தேகத்தோடு காணப்பட்டார்.

"விஷயம் என்ன வென்ருல்......" கரீம் ஷரீப் ஆரம்பித்தான். அந்த சமயத்தில் குவளையிலிருந்து சிப்கத்துல்லா 'மடக் மடக்' என தண்ணீர் குடித்தார்.

அவரது தொண்டைக்குள் செல்லு முன்பு அந்தத் தண்ணீரைக் கொப்புளித்து விடுவதற்கு அவர் முயற்சித்தார். ஆனுல் பயனில்லை. தண்ணீரில் காணப்பட்ட காரத்தை, கடுகடுப்பை அவர் உணர்ந்து கொண்டார். உடனே, குவளையை வீசியெறிந்து விட்டு கைத்துப் பாக்கியை வெளியே எடுத்தார்.

அவருக்குள்ளிருந்து ஏதொ வொரு சக்தி அவரை அதிர்ச்சிக் குள்ளாக்கியது. அவரது நடுங்கும் கரத்தி னின்று கைத்துப்பாக்கி கீழே நழுவி விழுந்தது.

கரீமுல்லாகான் உடனே எழுந்து நின்ருர். ஒன்றும் புரியாமல் ஒவ்வொருவரையும் அவர் மாறி மாறிப் பார்த்தார்.

"நீ என்ன செய்து விட்டாய்?"

அவர் முன்னுல் பாய்ந்தார். ஆனுல் அந்த இடத்தை விட்டு அவர் நகரு முன்பு கரீம் அவர் மீது பாய்ந்தான். கரீமுல்லா பல வீனமர்கவும் சோர்ந்தும் காணப்பட்டார்; போராட முயன்றும் முடி யாமற் போயிற்று. அவரது தாடையில் பலத்த அடி விழுந்தது; அவர் அடியற்ற மரம்போல சாய்ந்தார்.

"உன்னை வசப்படுத்தி விட்டேன்" கீழே விழுந்த அவரை நோக்கி கரீம் ஷரீப் எக்காள மிட்டான். "கரீமுல்லா, உன்னை வசப் படுத்தி விட்டேன். நீ சிறைக்குச் சென்றதேயில்லை யல்லவா? சிறைவாசம் எப்படி யிருக்கு மென்பதை உனக்கு நான் தெரியப் படுத்துகிறேன்."

காதர்கான் கீழே குனிந்து அலமாரியின் கதவைத் திறந்து விட்டான். ஒரு மனிதன் வெளியே வந்தான். உலைக்களத்தை இயக்கும் பீர்முஹம்மது ஆனந்தக்கடலில் மூழ்கியவனுகக் காணப் பட்டான். அவனது தோள்களை கரீம் ஷரீப் தட்டிக் கொடுத்தான்.

"நல்ல வேலைக்காரனப்பா நீ. ஒவ்வொரு மனிதனுக்கும் அவனுக்குரிய தண்டனை கிடைத்து விட்டது. காதர், சிப்கத்துல்லா கஷ்டம் கொடுக்கும் பேர்வழி என்பது எனக்குத் தெரிந்திருந்தது. உனது புத்திமதியை ஏற்று, அதன்படி அவர்களிருவருக்கும் குத்து விட்டிருந்தால், ஒருவனைத்தான் நம்மால் வீழ்த்தி யிருக்க முடியும். விளக்குகள் ஏன் அணைந்தன என்பதை அவர்கள் இப்போது தெரிந்து கொண்டிருப்பார்கள். அவர்களை அப்புறப்படுத்து"

பீர்முஹம்மது பல சாலியாக இருந்திருக்க வேண்டும். ஏனெ னில், சிறிதும் சிரமமின்றி கரீமுல்லாகானை அவன் தூக்கிச் சாய்வு நாற்காலியில் உட்கார வைத்தான். பிறகு, சிப்கத்துல்லாவையும் தூக்கி அவரை சோபாவில் கிடத்தினுன். சட்டைப் பையிலிருந்து சிறு பெட்டியை எடுத்து பீச்சாங்குழலில் ஏதோவொரு பொருளை நிரப்பி, உத்தரவுக்காக அவன் காத்திருந்தான்.

காதர் தலையசைத்ததும் உணர்ச்சியற்ற தசைமீது ஊசி ஏற்றப்பட்டது. மயக்க மருந்து ஏற்றப்பட்ட மனிதனின் கண்களைக் கவனித்து விட்டு அவன் சிரித்தான்.

"அரை மணி நேரத்தில் அவன் எழுந்து நடமாடும் நிலைக்கு வந்து விடுவான். எனது குத்து நீண்ட நேரம் நீடிக்காது"

"விபத்தின் போது வெளியேறக் கூடிய தனிவழியின் மூலம் அவனை முற்றத்துக்குக் கொண்டு செல்லமுடியுமா?" கரீம் கவலையோடு கேட்டான். "கரீமுல்லா, கொட்டாப்புளி போன்றவன். காதர், பீர்முஹம்மதுக்கு நீ உதவி புரிய வேண்டியிருக்கும். முற்றத்தில் கார் தயாராக நிற்கிறது. இரண்டு மணிக்கு உனக்கு அலுவல் இருக்கிறது என்பதை மறந்து விடாதே."

மகன் சரி, யென்றான்.

கரீமுல்லாவை பீர்முஹம்மது மூட்டை போல தூக்கிக் கொண்டான். காதர்கான் கதவை திறந்து வைத்தான். மூர்ச்சித்துப் பிரக்ஞை யற்ற நிலையில் இருந்த கரீமுல்லாவைத் தூக்கி, படிக்கட்டு வழியாக அந்த முரடன் கீழே இறக்கினான்.

பின்னர் திரும்பி வந்து, சிப்கத்துல்லாவை முதுகில் தூக்கிக் கொண்டு கீழே காருக்கு அவரைக் கொண்டு சென்றான். இவ்விஷயத்தில் காதர் கானின் உதவியை அவன் நாடவில்லை. சிரம மெதுவுமின்றி சிப்கத்துல்லாவையும் கரீமுல்லாவையும் அவன் காருக்குள் தள்ளி விட்டான்.

(தொடரும்)

புதிய அச்சு! வெளிவந்து விட்டது!!

## உர்தூ ஆஸான்

தமிழ் தெரிந்தவர்கள் ஆசிரியரின்றி 20 நாட்களுக்குள் உர்தூ பாஷையை பேசவும் எழுதவும் படிக்கவும் கற்றுக் கொள்ள ஏதுவான புஸ்தகம் இது ஒன்றே. இன்றே ஒரு உர்தூ ஆஸான் புஸ்தகத்தை வாங்கி இந்தியாவின் முக்கிய பாஷையாகிய உர்துவைக் கற்றுக் கொள்ளுங்கள்.

உயர்ந்த கிளேஸ் காகிதத்தில் 256-பக்கங்களில் அச்சிட்டு அழகிய இங்கிலீஷ் கலிகோ பைண்டு செய்யப்பட்டுள்ளது.

விலை ரூ. 3–00

ஹாஜி எம். எ. ஷாஹுல் ஹமீது அண்டு ஸன்ஸ்,
நெ. 20, ஹைரோட், திருவல்லிக்கேணி, மதராஸ் 5.

# தியாகத் தழும்பு!

[வேளாங்கண்ணி, கவிஞர் சாந்திதாசன்]

அத்தியாயம்—5

## "உருண்டோடும் பொருளின் ஒப்பற்ற சாதனை"

சிறகடித்துப் பறந்து சென்ற சில நாட்களின் சிதறலுக்குப் பின்னர்- தலைமீது பலமானதொரு ''பேண்டேஜ்'' தூய்மையான வெள்ளைத் துணியினால் சுற்றப்பட்ட தோற்றத்துடன், இருகரங்களிடையே இரும்பு விலங்கு அணிசெய்ய, முகத்திலே விரக்தி தாண்டவமாட, தரையைநோக்கியவாறு, வழக்கு மன்றத்திலே—குற்றவாளிக்குரியக்கூண்டிலே அமீருத்தீன் நின்றிருந்தான். ஆம், வளவனூரின் தலைநகரான வந்தவாசி நகரின் வழக்குமன்றத்திலே தான் அவன் நின்றிருந்தான். அவனது வழியிலே உதவிப்புரிந்த அந்த ஐந்து நண்பர்களும் கைதிகளுக்குரிய கைவிலங்குகளுடன் அக்கூண்டின் பக்கத்திலே சோகமே உருவாய் நின்றிருந்தனர். முற்கூட்டியே அஹமது ஷாவினால் முகமன்கூறி; மூதறிவாளர்களாகிய "வழக்கு மன்ற வல்லுணர்களுக்கு" வழங்கப்பட்ட "மோகனமான மூன்றை மூத்து அழகியாகிய" ப...ண...ம்! பலமுத்த மழைகளை மாரி சொறிந்து விட்டிருந்ததால் லத்திபு இடம் வாங்கிய "மரணவாக்கு மூலம்" என்னும் மகுடத்தின் பெயராலே—மருத்துவ மரபினர் தந்த மாபெரும் சாதனையின் தீர்ப்பாலே—அமீருத்தீனைக் கொலைக் காரனாக: மாற்றித்தந்த பெருமை கோர்ட்டார்களுக்குரியது. அதே சமயத்திலே அவனைக் கொல்லவந்தவர்களையும் மண்டையைப் பிளந்தவர்களையும் நிரபராதிகளாக நிலைக்கச் செய்து விட்ட திறமையும் நியாயஸ்தலத்தாரின் நிரந்தர முடிவு தான்.

ஆம், உருண்டோடும் உல்லாசப் பொருளின் உறுதியானப்படை எடுப்புதான்! அவற்றின் மகிமைதான்!! இத்தனைக்கும் முத்தவல்லியின் முழு முயற்சியே காரணம்.

அவைக் கூடியது. ஆலோசனையும் ஆரம்பமாகியது. நீதி மன்றத்தின் பக்கலிலே—நெஞ்சுயர்த்தி வாதிடக் காத்திருந்த வழக்கறிஞர் வாசுதேவன் நீதிபதி ஷபீயுல்லாவின் எதிரிலே எழுந்து நின்றார். மக்கள் மன்றத்தின் பார்வை அவர் மீது லயித்தது.

மைலார்ட்!

இவ்வழக்கைப் பொறுத்தவரையில் எனது அபிப்பிராயத்தைப் போதிய விளக்கங்களையும் இம்மன்றத்திலே கூறி விட ஆசைப்படு

கின்றேன். ரணக்காய முற்றவர் வளவனூர் பெரும் பிரமுகர் அஹமது ஷா அவர்களின் அருமைப் புதல்வன் அப்துல்லத்தீபு. அவ்வாறு காயப்படுத்தியவர் அதே வளவனூர் பள்ளிவாயிலிலே ஊழியம் புரியும் மோஅத்தீனர் அப்துல்லாவின் குமாரன். காரணம்:— லத்தீபு பணக்காரர் ஒருவரின் புதல்வனாய் இருப்பதைக் கண்டு தன்குடும்ப எளிய நிலைமையை ம ன தி லே— ஒப்பிட்டு பொறுமைக் கொண்டான். அன்றொரு நாள் லத்தீபும்— அவர் நண்பர் வஹாபும் இரண்டாவது காட்சி திரைப்படத்திற்குச் சென்ற போது வழி மறித்து அமீருத்தீன் லத்தீபை கொடு வாளால் தாக்கினன். லத்திபு அபாயகரமான நிலையில் கீழே சாய்ந்தார். உடன் சென்ற வஹாபு ஓடிவந்து ஊராரிடம் விஷயத்தை விளக்கினர். பார்க்கச்சென்ற ஊரார்களை அமீருத்தீனும்—அவனது சகாக்களும் கையப் புடைத்தனர். அதனல் இவர்களில் பலருக்கு மண்டை தெறித்தது. பின்னர் போலீஸுக்கு தகவல் கிடைத்து இதோநிற்கும் ஐவர்-அமீருத்தீன் ஆகியோர்களை கைது செய்யப்பட்டது. இத்தனை யும் நடந்தது அங்குள்ள ஓர் முஸ்லிம் சங்க கட்டிடத்தில் தான். அது ஒரு புரட்சிக்குழு! அச்சங்கத்தின் தலைவன்தான் இந்த அமீருத் தின். இன்றுவரை இவ்வூர் ஜெனரல் ஆஸ்பத்திரியிலே நம்பிக்கை யிழந்தவகையிலே இவனல்தாக்குண்ட அப்துல் லத்தீபு பெட்டிலிருக் கின்றார். ஆகவே குற்றவாளிக்குரிய தண்டனையை கொடுக்குமாறு கோர்ட்டார்கள் சார்பாக கோருகின்றேன் என்று முடித்து விட்டு ஆசனத்தில் அமர்ந்தார். அங்கு அமைதியாக வீற்றிருந்தவர்களின் வரிசையிலே—அஹமதுஷா! மொய்தீன்பிச்சை ஆகியோர்களின் முகவிதானத்திலே "வெற்றிப்புன்னகைத்" தாண்டவமாடியது. அடுத்தப்படியாக வழக்கறிஞர் வாசவன். எழுந்தார். யுவர்ஹானர்!

நான் கூற இருந்ததை முன்னல் பேசிய "பப்ளிக் பிராஸிக்யூட் டர்" அவர்கள் விளக்கிவைத்து விட்டதால் அதையே நானும் ஆமோ திக்கின்றேன் என்று முற்றுப்புள்ளி வைத்துவிட்டு அமர்ந்தான். தனவந்தர் அஹமதுஷாவின் தன்மான வைராக்கியத்தையும்—முத்த வல்லி மொய்தீன் பிச்சையின் முகலாவண்ய முத்திரையையும் காப் பாற்ற மூலதனம் பெற்று முன்வந்த பிரபல வக்கீல்தான் அவர். கைதிகளின் பக்கம் ஒரு ஏழைப்பங்காளர், எதிர்த்து வாதாடத் தான் செய்தார். அவரும் பிரபல வக்கீலாக விளங்குபவர்தான். முகிலோட்டம் போன்று முக்கிய இடங்களிலெல்லாம் மொய்தீன் பிச்சை குழுவினரால் முத்தம் கொஞ்ச செய்துவிட்ட "மூன்றெ ழுத்து" முயன்று நியாயம்பிறக்கவேண்டிய வழியிலே "மூடுத் திரை" போட்டு வைத்துக் கொண்டது.

எங்கும் ஒரே அமைதி!......... நீண்டதொரு சிந்தனையிலே ஆழ்ந்துவிட்டிருந்த நீதிபதி ஷபீயுல்லா தலை நிமிர்ந்தார். கூண்

டிலே சாந்தம் தவழ நின்றிருந்த இளைஞன் அமீருத்தீனையும்—அவனது நண்பர்களையும் ஒரு முறைகூர்ந்து நோக்கினர். அடுத்த நிமிடம் இக்கொலை சதிக்கே முக்கியக் காரணமாகிய அமீருத்தீனுக்கு ஐந்து ஆண்டுகள் கடுங்காவல் தண்டனையும்—அவனது நண்பர்கள் ஐந்து பேர்களுக்கும் முறையே ஒவ்வொரு ஆண்டு வெறும் தண்டனையும் அளிக்கின்றேன் என்று அவரது அதரங்கள் அசைந்து ஓய்வு பெற்றன. உடன் அதையே கரத்திலிருந்த "பேனுமுனை" வெள்ளைப் பேப்பரிலே, வரைந்து தள்ளியது. மேற்குறிப்பிட்டுள்ள, இரைவிழுங்கியவர்களில் ஒருவர் தான் நீதிபதி ஷபீயுல்லா. எனினும்' அவர் உணர்ந்த மறைவழியின் மெய்யொளிதந்த நடுநிலையால் அமீருத்தீன் விஷயத்திலே அதற்குமேல் அவரது காவு தீர்ப்புக்கூற மறுத்து விட்டதெனலாம்.

கூடி நின்றோரின் கூட்டம் கலைந்தது. முறுவல் பூத்த முகத்துடன் மொய்தீன்பிச்சை அஹமதுஷாவையும்—அவரது குழுவினரையும் அழைத்த வண்ணம் கோர்ட்டார்களுக்கு தமது காட்சியாளர்களின் சார்பாக ஒரு கூழைக்கும்பிடு போட்டு விட்டு வெளியேறினர். அவர் எப்பொழுதும் பணபலத்தின் பக்கத்திலே பச்சோந்தியாக இருப்பவர் என்பது இங்கு குறிப்பிடத்தக்கது. அல்லாஹு! என்று அலறிப்புடைத்துக் கொண்டு, கண்ணீரும்—கம்பலையுமாய் அப்துல்லாவும் வெளியேறிக் கொண்டிருந்தார்.

## அத்தியாயம்—6

# 'உண்மையும்—உயர்வும்'

நாட்க ளென்னும் நறுமலர் மொட்டு—மாதங்க ளென்னும் மணம் பரப்பிக்கொண்டு—ஆண்டுகளென்னும் அற்புத இதழ்களை விரிக்கின்றன. கொடுமைச் செயல்களிலே கொலு வீற்றிருந்த மெய்தீன்பிச்சை தனக்கு அமலனல் அளிக்கப்பட்டப் பரிசாக--கோரமானக் குஷ்ட்ட ரோக வியாதியினல் பீடிக்கப்பட்டு வீட்டின் உள்தாழ்வாரத்திலே மெத்தை விரிக்கப் பட்டிருந்தக் கட்டிலிலே படுத்திருக்கின்றர். அழுகி சீழ் வடியும் அவரது உடலின் குமட்டலெடுக்கும் துர்நாற்றத்தை மாற்ற, பல்வேறு பரிமளகந்த வாசனதி திரவியங்களை அவரது பக்கத்திலே தெளித்து விடப்பட்டிருந்தது. அதுவும் போதாமல் உயர்ந்தரக ஊதுவத்திகள் ஒரு கட்டு தலைமாட்டிலே துல்லியமானப் புகையினூடே வாடையை வீசிக் கொண்டிருந்தது. வானவீதியிலே—விண்மீன்களின் மத்தியிலே மதியத்தின் இத ஒளிக்கண்டு மலையமாருதமும் ஙொய்......என்ற ஓசையுடன் துதிப்பாடிக் கொண்டிருந்தது. தந்தையின் தலையருகிலே ஆகுலத்திலே ஆழ்ந்தவண்ணம் மெலிவுற்ற சரீரத்தினளாய் ஆயிஷா

அமர்ந்திருந்தாள். தந்தையாரின் வியாதிக் கண்டு தனையையாகிய அவள் வருந்தி மட்டிலுமல்ல. தனது அன்றையக் கட்டாரி விளையாட்டின் பொருட்டு, இன்று வரையில் காராக்கிரகத்திலே கிடந்து உழலும் காதலன் அமீருத்தீனின் நினைவும் சேர்ந்ததால் தான்.

டாங்......டாங்......என்று மணியும் இரவுகால இடைவேளையாக பத்து அடித்து ஓய்ந்தது. வடக்குப்புறம் படுத்திருந்த மொய்தீன் பிச்சை தெற்கு நோக்கித் திரும்பிப்படுத்தார். "ஆயிஷா! என் கண்ணே!! பல துர்ச் செயல்களை வாழ் நாளிலே செய்து புண்பட்ட நான், அமீருத்தீன் விஷயத்திலும் அன்று அது மாதிரி நடந்து கொண்டு பெரும் தீங்கிழைத்துவிட்டேன். அவற்றின் பயன்தான் இறைவன் எனக்கு இவ்வித கொடிய தண்டனையை அளித்து விட்டான்" என்று தீனமானக் குரலிலே திக்கித்திணறி நிறுத்தினர். அத்தா! இது என்ன பிதற்றல் சிறுபிள்ளை மாதிரி? பேசாமல் படுத்திருங்கள். வியாதிக்காரர்கள் பேசக்கூடாது என்று ஒரு அடக்கு முறையை ஆயிஷா விதித்தாள். எனினும், தனது தந்தையாரின் அட்டகாசங்களை அவள் நினைவு கூர்ந்தவுடன், அவைகள் அனைத்தும் ஓர் "நச்சரவமாக" வே அவள் மத்தியிலே படமெடுத்தாடி, நஞ்சான உஷ்ணத் தென்றலை சுவாசத்திலிருந்து அவை வீசுவதாகவே அவள் உணர்ந்தாள். அதுகாறும் நீலக்கருவிழிகளிலே தேங்கி நின்ற "நீர் முத்துகள்" சில தரையிலே உருண்டோடின. சற்றுநேரம் புதல்வியின் புத்திபுகட்டலினல் மௌனம் சாதித்த மொய்தீன்பிச்சை வரண்ட தொரு வெடிசிரிப்பினூடே, "நீ ஒரு பைத்தியக்காரப்பெண்! இதோ பாரம்மா! அமீருத்தீன் விடுதலையாகி இங்குவந்தவுடன், அவனளவிலே நான் நடந்து கொண்ட அக்கிரமங்களுக்கு மன்னிப்பு கேட்டு, உன்னையும்—அவனையும் ஒன்ருக அமரவைத்து, மணவறையிலே மலர் மாலை சூடியோராய் காட்சியளிக்க கண்டு, மருமகனே! என்று மனதார அவனை நான் அழைத்து விட்டால் மகிழ்ச்சி யோடு உயிர் துறப்பேனம்மா!" என்று இருமல்களுக்கிடையே முத்தாய்ப்பு வைத்தார் அவர். அத்தா! தாங்களா இப்படி பேசுகின்றீர்கள்? என்று ஆச்சரியம் தொனிக்க வினவினள் ஆயிஷா. அவளது இதயமெங்கும் ஓர்வித இன்பப் புல்லரிப்பு அவ்வார்த்தை இனிமையிலே எழத்தான் செய்தது.

"ஆயிஷா! நானேதான் பேசுகிறேன். துன்பத்தில் துவண்டு விழுந்து விட்ட அவனுக்கு இன்ப வாழ்வு அளிக்க வேண்டும் என்ற ஒரே குறிக்கோள் மட்டிலுமல்ல. அன்ருடம் அனுபவரீதியா அணுவணுவாக என்னுடைய உடல் சிதைந்து சித்திரவதைக்குள்ளாகும் வேதனையிலே— மிருகத்தனத்தை மறந்து மனித குணத்திற்கு மாறி

விட்ட மெய்தீன் பிச்சைக் கூறுகிறேன். அவனுக்கு நான் புரிந்த அநீதிகளுக்குப் பிராயச் சித்தம் தேடவேண்டு மல்லவா? பொன்னை யும்—பொருளை'யும்–உன்னையும் அவனுக்கு அளித்துவிட தயாராகி விட்டேனம்மா!' என்று தழுத்தழுத்தக் குரலிலே கூறினார் அவர். அடுத்த கணம் தெருவாயில் கதவை தட...தட வென்று யாரோ தட்டும் சப்தம் பலமாக கேட்டது. உன் பாட்டனார் பக்கத்து வீட்டு பதீவுல் ஜமான் என்னைப் பார்ப்பதற்கு வந்திருப்பார், போய் கதவைத் திறந்து விடம்மா! என்று மகளைப் பார்த்து வாஞ்சையோடு மெய்தீன் பிச்சைக் கூறினார். ஆயிஷாவும் அவசரமாகப் போய் தெருவாயில் கதவைத் திறந்தாள்.

வாலிபக் கலைச்சொட்டும் முகத்தில் வளர்ந்தோடிக் கிடந்த கரு நிற தாடியும்—அழுக்கேறிய சட்டையும், கோதி விடப்படாத கேச மும் கொண்டு, வேதனையின் வடிவமாய் ஒருவன் உள்ளே நுழைந் தான். பயந்து நடுங்கிய ஆயிஷா! எவனோ பைத்தியக்காரன் வழி தவறி வந்து உள்ளே நுழைகிறான் என்று நினைத்துக் கொண்டு நாக்குழர, ஏய்...மரியாதையாக வெளியே போய்விடு! என்று அதட்டி னாள் அவனை. அலட்சியமாக அவள் மீது ஒருப்பார்வையை வீசிய அவன், ஆயிஷா! சற்று பொறுங்கள்! உங்கள் தந்தையார் காட்டியப் பாதையிலே எனது "உல்லாச விருந்தோம்பல்" பூர்த்தியாகி விட்டது. இன்றோடு, விடை பெற்றுப் போக வந்த என்னை விரட்டாதீர்கள் என்று பகர்ந்தான் அவன். அப்படியே மெய் மறந்து நின்ற ஆயிஷா, அமீர்! என்னை மன்னித்து விடுங்கள்! நினைத்ததும்–அது நடந்ததும் வேறு விதமாக முடிந்து விட்டது என்று கூறிக்கொண்டே கண்ணீர் மல்கும் தனது முகத்தை முந்தானையின் தலைப்பினால் மூடிக் கொண் டோடி ஒரு அறையினுள் நுழைந்து தாழிட்டுக் கொண்டாள் அவள்.

அமீர் என்று ஆவேசமாக அவள் கத்தியதின் எதிரொலி மெய்தீன் பிச்சையின் செவிகளைத் தாக்கியது. புத்துணர்ச்சியும்— புதியதொரு சக்தியும் தளர்ச்சியுற்ற அவரது உடலிலே எத்தனையோ மின்சார சக்திகளைப் பாய்ச்சின. சுருசுருப்பினூடே எப்படியோ எழுந்து உட்கார்ந்தார் அவர். "அமீருத்தீன்! உனது வருகையை எதிர்ப் பார்த்துதான் இந்த ஸ்தூலமான பூத உடலிலே—இத்தனை நாள் புனிதமான உயிர், தொக்கி நின்றது" என்று வார்த்தைக்கு சற்று நேர இடைவெளித் தந்தார் அவர்.

"ஏன்? மீண்டும் அதே இடத்திற்கு அனுப்பி வைக்கவா? அல்லது மறு உலகத்திற்கே மாபெரும் இடம் பிடித்துத் தரவா?" என்று கதறினான் அவன். "இல்லை...இத்தனை நாள் உன் விஷயத் திலே நான்—இரக்க மற்ற அரக்கனாக மாறி யிருந்தது உண்மை தான். இடர் பல தந்துக் கொண்டிருந்ததும் உண்மைதான். அந்த வினை களுக்குரிய பலனை இதோ அனுபவித்து உணர்கிறேன். அது மட்டு

மல்ல. உன்மீது உனக்கிருந்த வெறுப்பான மனநிலையினால் உனது தகப்பனாரையும் வேலையிலிருந்து உடனடியாக நீக்கினேன். சென்ற வருடம் உத்தம பாளையத்திலே பள்ளி வாசல் ஊழியம் பார்த்துக் கொண்டிருந்த அவர் இறைவனடி சேர்ந்து விட்டதாக கேள்விப் பட்டு வருந்தினேன். அவர் பிரிவின் கஷ்ட நஷ்ட பாவத்திலும் எனக்குப் பங்குண்டு! அல்லா(ஹ்)வின் மீது ஆணையிட்டுக் கூறு கிறேன். இதுவரையில் நடந்ததை மறந்து விடு! அந்த கர்ம வினைகளுக் கெல்லாம் எனது ஆயுள் காலத்திலே ஒரு பரிகாரம் தேட, என்னால் சிதைந்த உனது வாழ்வு—என்னாலேயே வளம்பெற— இதோ எனது ஒரே செல்வம் ஆயிஷாவை அரும்பத்தியாக அடைந்து எனது திரண்ட சொத்துகளுக்கு அதிபதியாய் வாழ்வை துவங்கு! அவளும் தாயற்றவள்! நீயும் தாயற்றவன்!! மேலும், நீங்கள் இருவரும் இன்று வரை இணைந்தப் பாசமுடையவர்க ளென்பதும் எனக்கு நன்றாய் தெரியும். இனி "மொஅஸினார்" மகனல்ல நீ! முத்தவல்லியாகி யாகிய எனது "மூன்றடுக்கு மாளிகை"யின் அதிபதி நீ!! "இன்னமல் முஃமினீன—இஃவதுன்"! அதாவது—முஃமீன், முஸ்லிம்களாகிய நீங்கள் அனைவர்களும் ஓர்மையிலே ஒரே தாய், தந்தை வயிற்றில் உதித்த சகோதரர்களுக்குச் சமமானவர்களே! என்னும் இறை-மறை கூற்றை என்னைப் பொறுத்த வரையில் உன்வாயிலாக நிரூபிக்க நாடியுள்ளேன் என்று நீண்ட தொரு உரையோடு நிறுத்தினார் அவர். இவ்வார்த்தைகளினால் ஏக காலத்திலே—இன்பமும், துன்பமும் துய்தவனாக நின்றான் அவன்.

ஆம், தனது இலட்சியக் காதலியாக அமைய இருக்கும் ஆரணங்கு ஆயிஷாவை நினைத்தவுடன் ஓர் புறம் மகிழ்ச்சி! தனது பார்வையும்—உதவியு மின்றியே தனிமையில் தகனமாகி விட்ட தந்தையை நினைத்தவுடன் மாளாத் துயரமும் அவனைத் சூழ்ந்துக் கொண்டு விட்டதால் தான்.

## அத்தியாயம்—7

## "சதி-பதிகளின் சந்திப்பு"

விண்ணிலே 'முகிற்' கூட்டங்களின் மிரட்டலையும்—மண்ணிலே 'பனித்துளி'கள் மூட்டங்களின் படையெடுப்பையும் ஏக காலத்திலே சமாளித்துக் கொண்டு; பகலவனின் பொற்கிரணம் எங்ஙனும் சிதறின. தெருவாயல் முகப்பிலிருக்கும் பவள மல்லிகை, மரத்தி லிருந்து வருஷிக்கும் குளிர்ந்த தென்றலை அனுபவித்தவாறு, மூன்றடுக்கு மாளிகையின் வராந்தாவிலே 'பரணிச் சேர்' ஒன்றில் படுத்த வண்ணம் அன்றைய 'செய்தித் தாளை' வாசித்துக் கொண்டி ருந்தான் அமீருத்தீன். 'பொக்கை வாய்' திறந்து சிரிப்பொலியை சதாவும் சிந்திக் கொண்டிருக்கும் ஆண் குழந்தை ஒன்றை தாய்மைப்

பாசம் ததும்ப! இடுப்பில் தாங்கி ஒயிலாக அவனது அருகில் வந்து நின்ற ஆயிஷா, என்ன ஒரே அடியாக 'பத்திரிகை' படிப்பதில் மூழ்கி விட்டீர்? நமது புது 'முத்தவல்லி' மெய்தீன் பிச்சையைப் பார்த்தீர்களா? இன்று அவனுக்கு "ஓராண்டு நிறைவு". தனது வாரிசாகிய பேரக் குழந்தையின் இந்த சிறப்பு விழாவைக் காண அத்தா கொடுத்து வைக்க வில்லை என்று நீண்ட தொரு சோகப் பெரு மூச்சுடன் முடித்தாள் அவள். கெம்பீரமாக அவள் மீது ஒருப் பார்வையை வீசிய அமீருத்தீன், அதை யெல்லாம் ஏன் இப்பொழுது நினைக்கின்றாய் ஆயிஷா? ஆவது அனைத்தும் அழிவது—அழியச் செய்வது தானே அல்லா(ஹ்)வின் திருவிளையாடல்! நீயும்—நானும் கூடத்தான் ஒரு நாளைக்கு அழியப் போகிறோம். உயிருள்ள வரையில் இந்த உடலிலே—உரியக் கடமைகளையும்—உல்லாச வாழ்க்கையையும் செலுத்துவோம்.

கண்கலங்காதே! கவலையை விடு கண்ணே! தண்மதியும்—தாரகைகளும், கருங்கடலும்—கதிரோனும், வண்ணமலர்களும்—வண்டினமும், இன்பமும்—துன்பமும் என்றென்றும் நிரந்தரமாக இணைந்திருப்பதல்ல. இன்றில்லா விடினும் ஒரு நாளைக்கு வந்த வழியினையே சிந்துப்பாடி நோக்க வேண்டியவர்கள் நாம் என்று சமாதானம் கூறி விட்டு, தன்னை நோக்கி இரண்டு பிஞ்சுக் கரங்களால் தாவும் தனயனை அவளிடமிருந்து வாங்கி இரு கன்னக் கதுப்புகளிடையே தனது அதரத்தினால் முத்தமென்னும் முத்திரைகளைப் பதித்தான் அவன். எவ்வளவு எளிதில் என் மனதைக் கவர்ந்து விட்டீர்கள்...என்று கூறினாள் அவள். எல்லாம் இதோ எனது நெற்றியிலே நீ தந்து விட்ட 'தியாகத் தழும்பின்' தொடர்பு தான் என்று இளநகைப் புரிந்தான் அவன். அந்த சமயத்திலே அந்த மாளிகையின் முகப்பு ஜன்னலண்டையிருந்த 'பிலிப்ஸ் ரேடியோ'விலிருந்து அத்தம்பதிகளுக்கு எழுச்சி யூட்டும் தோரணையிலே—

"நீதியை நாட்டத்தானே—நீயே துணிந்து வாராய்"! என்று இலட்சியப் பாடகர் ரஹீமின் இன்குரல் ஒலித்துக் கொண்டிருந்தது.

முற்றிற்று.

---

இக்கதை முற்றும் கற்பனையே. எந்த தனி நபரின் வரலாறும் அல்ல.

تبصير الحميد في تفسير القرآن المجيد

# தப்ஸீறுல் ஹமீத் பீ தப்ஸீரில் குர்ஆனில் மஜீத்

நமது நாயகம் (ஸல்) அவர்களுக்கு அருளப்பட்ட திருக்குர்ஆனே உலக மக்கள் அனைவருக்கும் பொது வேதமாகவும், இஸ்லாம் மார்க்கத்திற்கு ஆதாரமாகவும் இருந்து வருகிறது. முஸ்லிம்கள் இஸ்லாம் மதத்திற்கு ஆதாரமாயுள்ள திருக்குர்ஆனின் கட்டளைகளையும் அரிய போதனைகளையும் தெரிந்து கொள்வது அவசியமாகும். இஃது திருக்குர்ஆனின் **தப்ஸீரை** தமிழ் பாஷையில் **ஸுன்னத்து வல் ஜமாஅத்தின்** உலமாக்களாலும் இமாம்களாலும் எழுதப்பட்ட தப்ஸீர்களை ஆதாரமாகக் கொண்டு, எழுதப்பட்டது.

இந்த தப்ஸீரில் குர்ஆன் ஆயத்துகளை அறபியில் அழகாக எழுதி போட்டோபிளாக் செய்யப்பட்டு தனித்தனியாக ஆங்காங்கு அமைத்தும் அதன் கீழ் சரியான தர்ஜுமாவும், தப்ஸீர் என்னும் விரிவுரையும், வியாக்யானமும், ஷஃனு நுஸூல் என்னும் ஒவ்வொரு ஆயத்தும் இறங்கிய காரணங்களும், அதற்கேற்ப ஹதீது, ரிவாயத்து, ஹிக்மத்து, பாயிதா, கிஸ்ஸா, அஜீபா முதலிய அரும் பெரும் ஆதாரங்களும் ஒருங்கே சேர்த்து அமைக்கப் பெற்றிருக்கின்றன.

**முதல் பாகம்:** ஸூறத்து பாத்திஹா—பகருவிலிருந்து ஸூறத்துன்னிஸா முடிய (ஒரு மன்ஸில்) 5¼ ஜுஸு வரை விலை ரூ. 10

**இரண்டாம் பாகம்:** ஸூறத்துல் மாயிதா முதல் ஸூறத்துத் தவ்பா முடிய விலை ரூ. 10

**மூன்றும் பாகம்:** ஸூரே யூனுஸ் முதல் ஸூறத்துக் கஹ்ல் முடிய 7-ஸூறுக்களின் தப்ஸீர் விலை ரூ. 10

**நான்காம் பாகம்:** ஸூரத்துல் இஸ்றாஉ முதல் ஸூறத்து நூர் முடிய 8-ஸூராக்களின் தப்ஸீர் விலை ரூ. 10

**ஐந்தாம் பாகம்:** ஸூறத்து புர்க்கான் முதல் ஸூறத்து யாஸீன் முடிய 12-ஸூராக்கள். விலை ரூ. 12

**ஆறும் பாகம்:** அச்சாகிறது.

---

ஹாஜி எம். ஏ. ஷாஹுல் ஹமீது அண்டு ஸன்ஸ்
நெ. 20, ஹைரோட், திருவல்லிக்கேணி, மதறாஸ். 5

Edited by M. S. ABDUL KHUDUS.
Published by Hajee M. A. Shahul Hameed & Sons.
Printed at Shahul Hameedia Press, Madras.

18081

# யூனானி வைத்திய முறைகள்.

## இரண்டாம் பதிப்பு

(தமிழில்)

இந்த புஸ்தகம் உர்து கிதாபுகளிலிருந்து சேகரிக்கப் பட்டு தமிழில் மொழி பெயர்த்து எழுதப்பட்டது.

இதில் மனிதனுக்கு வரக்கூடிய நோய்களை பல தலைப்புகளுக்கு அடியில் பிரிக்கப்பட்டு, ஒவ்வொரு தலைப்புக்கும் அடியில் வரும் அநேக நோய்களுக்கும் பலவித மருந்துகள் கூறப்பட்டு இருக்கின்றன. இந்த மருந்துகள் நமது வீட்டிலேயே சொற்ப செலவில் தயாரித்துக் கொள்ளக் கூடியவைகள். இதில் கூறப்பட்ட தலைப்புகள்:—

சிரசு சம்பந்தப்பட்ட நோய்கள், சரீர சம்பந்தப்பட்ட நோய்கள், தாது சம்பந்தப்பட்ட நோய்கள், பல்வேறு விஷங்களுக்கு பல்வேறு சிகிச்சைகள், மூலத்திற்கு பல்வேறு பாகங்கள், கழுத்து சம்பந்தப்பட்ட நோய்கள், காச சம்பந்தப் பட்ட நோய்கள், தோல் சம்பந்தப்பட்ட, நோய்கள், பல்வேறு நோய்கள்.

இதில் குறிக்கப்பட்ட எல்லா நோய்களுக்கும் மருந்துகள் சொல்லப்பட்டிருக்கின்றன: சில விடங்களில் ஒரே நோய்க்கு சுமார் 40, 50 மருந்துகள் வரை விவரிக்கப்பட்டு இருக்கின்றன.

இந்த புஸ்தகம் ஒவ்வொரு வீட்டிலும் இருக்க வேண்டியது என்று சொல்ல அவசியம் இல்லை. 282-பக்கங்களைக் கொண்டது. கலிகோ பைண்டு செய்யப்பட்டது.

இதன் விலை ரூ. 3

---

கிடைக்குமிடம்:—

ஹாஜி எம். எ. ஷாஹுல் ஹமீது அண்டு ஸன்ஸ்,

நெ. 20, ஹைரோட், திருவல்லிக்கேணி, மதராஸ் 5.

# இனாம்! இனாம்!!

## ஹமீதிய்யா முஸ்லிம் காலண்டர் 1959.

இங்கிலீஷ், தமிழ், அரபு ஆக மூன்று தேதிகளும் 3 கலர்களில் அச்சிடப்பட்டு, ஒரு மாதத்திற்கு ஒரு ஷீட்டாக 12 ஷீட்டுகள் அடங்கியுள்ளது. ஒவ்வொரு ஷீட்டிலும் தொழுகைகளின் நேரங்களாகிய அவ்காத்துஸ் ஸலாத்தும் சேர்க்கப்பட்டுள்ளது.

எங்களிடமிருந்து ஒரே நேரத்தில் எங்களது சொந்த பிரசுரங்களுள் ரூபாய் 10க்கு குறைவில்லாமல் சொந்த உபயோகத்திற்கு கிதாபு புஸ்தகம் தருவிப்பவர்களுக்கு ஷீட் காலண்டர் ஒன்று (எங்களிடம் காலண்டர் ஸ்டாக் யிருக்கும் வரை) இனாமாகச் சேர்த்து அனுப்பப்படும்.

SCANNED

---

கிடைக்குமிடம் :—

ஹாஜி எம். எ. ஷாஹுல் ஹமீது அண்டு ஸன்ஸ்,
கெ. 20, ஹைரோட், திருவல்லிக்கேணி, மதராஸ்-5.